# முதலியார் குப்பம்



## படகு குழாம்

சென்னையில் இருந்து புதுச்சேரி செல்லும் கிழக்கு கடற்கரை சாலையில், 51 கி.மீ. தூரத்தில் பரமன் கேணி பாலம் அருகே உள்ளது முதலியார் குப்பம். இங்கு சுற்றுலா வளர்ச்சி கழகம் சார்பில் படகு குழாம் அமைக்கப்பட்டு இருக்கிறது.

இங்கு, தினமும் படகு சவாரி செய்யலாம். சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் சுற்றுலா பயணிகளின் வருகை அதிகமாக இருக்கும்.

இனிமையான சூழலோடு இதயங்களை பரிமாறிக் கொள்ளும் காதலர்களும், புதுமணத் தம்பதிகளும் அதிகம் வருகிறார்கள்.



## ராஜேஷ்குமார்

1



# அவள் ஓர் ஆச்சரியக்குறி

போர்டிகோ படிக்கட்டோரம் அடங்கி நிற்க- பிரீப்கேஸ்களோடு இரண்டு பேர் இறங்கினார்கள்.

இளைஞர்கள், 'பார்ட்லே' பேண்ட் சட்டைக்குள் அவதியாய் சிக்கி இருந்தார்கள். வரவேற்பு அறைக்குள் நுழைந்தார்கள்.

'ப' வடிவ சோபாக்களில் சிலபேர் உட்கார்ந்திருக்க- எதிரே இருந்த 'ப்ளு ஷிப்' டெலிவிஷன் கிரிக்கெட் விளையாடிக் கொண்டிருந்தது.

பாந்த மேசைக்கும்- 'கீ போர்டு'க்கும் இடையில் நின்று கழுத்து 'டை'யை இறுக்கிக்கொண்டிருந்த- சுத்தமான வரவேற்பு இளைஞனை இருவரும் நெருங்கினார்கள். அவன் செயற்கையாய் புன்னகைத்து-

"எஸ்- ப்ளீஸ்..." என்றான்.

இருவரில் ஒருவன் கன்னத்தை இடதுகை ஆட்காட்டி விரலால் நிரடிக்கொண்டே சொன்னான்: "எங்களுக்கு இரண்டு அறை வேணடும்."

"ஏ.சியா?"

"ஆமா."

அவன் லெட்ஜரை இழுத்துக்கொண்டு, பெயர்களை பதிவு செய்ய ஆரம்பித்த விநாடி ஒருவன் கேட்டான்:

"பார் அட்டாச்டுதானே?"

"ஆமாம்."

"சைனீஸ் ரெஸ்டாரெண்ட் இருக்கா?"

"இருக்கு."

"பெண்கள் கிடைப்பார்களா?"

வரவேற்பு இளைஞன் நிமிர்ந்தான்.

ஜன்னலுக்கு வெளியே வானம் நீக்ரோ நிறத்துக்கு போயிருக்க- சாவித்திரி சுவர் கடிகாரத்தைப் பார்த்தாள். அது 7.35 என்றது.



அவள் பதட்டம் அதிகரித்தது. சாய்வு நாற்காலியில் உட்கார்ந்து சாவதானமாய் மாலை தினசரியைப் புரட்டிக்கொண்டிருந்த கணவன் ராமநாதனைக் கூப்பிட்டாள்.

"என்னங்க?"

அவர் பத்திரிகையை தாழ்த்தினார்.

"என்ன சாவித்திரி?"

"மணி ஏழரைக்கு மேலாச்சு... இன்னும் வனிதாவைக் காணோமே?"

"வந்துருவா... வந்துருவா..."

சாவித்திரி அவரை கோபமாய் பார்த்தாள். "ஒரு நாற்காலியும், பத்திரிகையும் கிடைச்சுட்டா... உங்களுக்கு வேற எதுவுமே வேண்டாம். வயசுக்குவந்த பொண்ணை இன்னும் காணோம்னு நான் வயித்துல நெருப்பைக் கட்டிகிட்டு இருக்கேன். நீங்க என்னான்னா... வந்துடுவா வந்துடுவான்னு சாவகாசமா சொல்லிட்டு இருக்கீங்களே?"

"உனக்கு தொட்டதுக்கெல்லாம் பதட்டம்."

"காலையில கல்லூரிக்கு போன பெண் இன்னும் வீடு திரும்பலைன்னா பதட்டப்படாமே இருக்க முடியுமா?"

"பதட்டப்பட்டா... உடனே வனிதா வந்துடுவாளா? அவ வர்ற நேரத்துக்குத்தானே வந்து சேருவா... இன்னிக்கு 'ஸ்பெஷல்' வகுப்பு இருக்கு. வர தாமதமாகும்னு சொல்லிட்டுத் தான் போனா."

"ஏழரை மணி வரைக்குமா 'ஸ்பெஷல்' வகுப்பு?"

"கல்லூரி அஞ்சு மணிக்கு முடியும். அஞ்சரையில் இருந்து ஆறரை மணி வரைக்கும் 'ஸ்பெஷல்' வகுப்புன்னு சொன்னா."

"ஆறரைக்கு வகுப்பு முடிஞ்சா இந்நேரம் வந்து சேர்ந்திருக்கணுமே?"

"சரியா கணக்குப் போடாதே! பஸ் பிடிக்க வரவேண்டாமா? அப்படியே பஸ்ல வந்தாலும் வழியில் எதாவது போக்குவரத்து

## முத்திரை வரிகள்



**மெதுவாகப்பேசு.அது உன் ரகசியங்களைப் பாதுகாக்கும். நல்ல எண்ணத்தோடு இரு; அது உன் நடத்தையைப் பாதுகாக்கும்.**

*(-வள்ளலார்)*

*தகவல்:- ஆர். பிரகாசம், காவேரிப்பாக்கம்*

தெரிசல் அது- இதுன்னு அரை மணி நேரம் முன்னே பின்னே ஆகிறதுதான்."

"இந்த வெத்துப்பேச்சை பேசிட்டிருக்காதீங்க... போய் பஸ் நிறுத்தத்தில் நின்னு அவ வந்தா கூட்டிட்டு வாங்க... போங்க."

ராமநாதன், பத்திரிகையை டீபாயின் மேல் வைத்துவிட்டு- ஹேங்கரில் தொங்கிய சட்டையை எடுத்து மாட்டிக்கொண்டு வெளியே வந்தார்.

சாவித்திரி வாசலில் வந்து தவிப்போடு காத்திருக்க- அவர் இருட்டான தெருவில் செருப்பைத் தேய்த்துக்கொண்டு நடந்தார்.

இரண்டு தெருக்களைக் கடந்து- பிரதான சாலையில் திரும்பியதுமே பயணிகள் நிழற்குடை கண்ணில் அடித்தது. ஆட்கள் யாருமில்லை. ராமநாதன் அங்கிருந்த சிமெண்டு பெஞ்சில் உட்கார்ந்து- பஸ் வரும் திசையைப் பார்த்தார்.

நிமிடங்கள் கரைய தொடங்கின.

ஒவ்வொரு டவுன் பஸ்சும் இரைச்சலோடு வந்து நிற்பதும்- ஆட்களை உதிர்த்துவிட்டு செல்வதுமாய் இருந்தது.

ஒவ்வொரு பஸ்சின் முகம் தெரியும்போதும்- வனிதா இந்த பஸ்சில் வந்துவிடுவாள் என்ற நம்பிக்கை அவருக்குள் துளிர்ப்பதும்- பஸ் முதுகைக் காட்டிக்கொண்டு போனதும் தளர்வதுமாய் இருந்தார்.



கைகடிகாரத்தைப் பார்த்தார்.

நேரம் 8.15.

சாவித்திரியின் பதட்டத்திலிருந்த நியாயம் மெல்ல மெல்ல அவருக்கு புலப்பட தொடங்கியது.

'இந்தப் பெண் எங்கே போயிருப்பாள்?'

'ஸ்பெஷல் வகுப்பு இந்நேரமா இருக்கும்?'

ராமநாதனின் அடிவயிற்றில் நெருப்பு பற்றிக்கொண்டது. உட்கார்ந்திருந்த இடத்தைவிட்டு மெல்ல எழுந்து- நிழற்குடைக்குள் டென்ஷனாய் உலாவ தொடங்கினார். முகம் வியர்த்துவிட்டது.

'ஏன் தாமதம்?'

அவர் தினறலாய் யோசித்துக்கொண்டிருக்கும்போதே பக்கத்தில் அந்த ஸ்கூட்டர் வந்து நின்றது.

"ராமநாதன்..."

குரல் கேட்டு நிமிர்ந்தார்.

அவருடைய நண்பர் மணிவாசகம். அவர் கேட்டார்:

"என்ன... இந்த நேரத்துல இங்கே?"

"பொண்ணு இன்னும் கல்லூரியில் இருந்து திரும்பலை. அதான் வர்ற பஸ்சை பார்த்திட்டிருக்கேன்."

"மணி எட்டரையாகப் போகுது?"

"அதான் கவலையா இருக்கு."

"தோழிகள்கூட சேர்ந்துகிட்டு சினிமா கினிமா போயிட்டாளோ என்னவோ?"

"அவளுக்கு சினிமாவே பிடிக்காது, மணிவாசகம்."

"ஏதோ ஒரு பஸ் வருது... இதான் கடைசி பஸ்சுன்னு நினைக்கிறேன். இதுல உம்பொண்ணு வந்துடுவா."

ராமநாதன் திரும்பிப் பார்த்தார்.

தொலைவில் வெளிச்சத்தைப் பரப்பிக்கொண்டு பஸ் வரும் இரைச்சல் சத்தம் கேட்டது.

## 2

நிமிர்ந்த ஓட்டல் வரவேற்பு இளைஞன்- அந்த இரண்டு பேர்களையும் பார்த்து புன்னகைத்தான்.

"இது ஒரு 'திரிஸ்டார்' ஓட்டல். நீங்க கேட்டது; இனிமே கேக்கப்போறது எல்லாமே கிடைக்கும். நீங்க அறையில் இருங்க. ஏற்பாடு பண்ணுறேன்" பதிவேட்டில் பெயர்களை பதிவு செய்தபின்- இண்டர்காமில் ரூம் பாயை வரச்சொல்லி- அவன் வந்ததும் சாவியை எடுத்து நீட்டினான்.

"169-ல தங்க வை."

"வாங்க சார்" ரூம் பாய் பெட்டிகளை எடுத்துக்கொண்டு நடக்க- இருவரும் பின்தொடர்ந்தார்கள். லிப்டில் முதல் மாடியைத் தொட்டு அறை எண் 169-ல் பிரவேசித்தார்கள்.

'ரூம் பாய்' அறையை சுத்தம் செய்து கொடுத்துவிட்டு பவ்வியமாய் எட்டி நின்று கேட்டான்: "காப்பி கொண்டு வரட்டுமா சார்?"

"என்னது, காப்பியா? முட்டாள்! இங்கே இருக்கிற 'பார்'ல ஸ்காட்ச் கிடைக்குமா?"

"கிடைக்கும் சார்."

"போய் வாங்கிட்டு வா" பர்சைத் திறந்து ஐநூறு ரூபாய் நோட்டு இரண்டை விட்டெறிய- 'ரூம் பாய்' அவற்றை பொறுக்கிக்கொண்டு வெளியேறினான். ஒருவன் சுவரோடு பதித்திருந்த கேசட் பிளேயரைத் தட்ட- அறை பூராவும் 'திம் திம்' என்று கிடார் அதிர்ந்தது.

இரண்டு நிமிடங்களுக்குப் பின்-



அறைக் கதவு வெளியே அழைப்புமணி கூப்பிட்டது.

"உள்ளே வரலாமா?"

ஒரு நடுத்தர வயது ஆசாமி உதட்டில் ஒட்ட வைத்த புன்னகையோடு உள்ளே வந்தான்.

"சார்.. பொண்ணுங்க கேட்டீங்களாம்."

"ஆமா."

"இந்த ஆல்பத்தைப் பாருங்க சார்" சொன்ன அவன் கையில் வைத்திருந்த டைரி அளவு ஆல்பத்தை அவர்களிடம் நீட்டினான்.

அந்த கடைசி பஸ்சும் வந்து நின்று ஒரு கிழவியை மட்டும் உதிர்த்துவிட்டுப் போக- ராமநாதன் சோர்ந்துபோனார். மணிவாசகம் சொன்னார்:

"உன் பொண்ணு சினிமாவுக்குத்தான் போயிருப்பா... பேசாம வீட்டுக்குப் போ. இன்னும் ஒரு மணி நேரத்திலே வந்துசேருவா."

'ஒருவேளை சினிமாவுக்குத்தான் போய்விட்டாளோ?' -யோசித்தவர், மணிவாசகத்திடம் விடைபெற்றுக்கொண்டு வீட்டை நோக்கி நடந்தார்.

வாசலிலேயே காத்துக்கொண்டிருந்த் சாவித்திரி- அவர் நெருங்க நெருங்க கலவரத்தோடு கேட்டாள்:

"என்னங்க.. நீங்க மட்டும் தனியா வர்றீங்க?"

"வனிதா கடைசி பஸ்சிலேயும் வரலை சாவித்திரி."

"எனக்குப் பயமா இருக்குங்க. கல்லூரிக்குப் போன் பண்ணிப் பாருங்க."

"இந்நேரத்துக்கு அங்கே போன் போட்டால் அதை எடுக்க யாரும் இருக்க மாட்டாங்களே?"

"அவ சிநேகிதி மாலினி வீட்டுக்காவது போய் பார்த்துட்டு வாங்களேன்... அவளை விசாரிச்சா விவரம் தெரியும்."

ராமநாதன் தயங்கினார். "சாவித்திரி..." என்றார்.

"என்னங்க?"

"வனிதா சினிமாவுக்குப் போயிருக்காளோ என்னவோ? இன்னும் கொஞ்ச நேரம் பார்த்துட்டு- அப்புறமா இந்த விசாரிக்கிற வேலையை வைச்சுக்கலாமே? என்னா... வயசுப்பொண்ணு இன்னும் வீடு வந்து சேரலைன்னு விசாரிக்கப் போனா... கேக்கிறவங்க அதை வேறவிதமா திரிச்சு வெளியே சொல்லிடுவாங்க."

சாவித்திரி அழுகைக் குரலில் வெடித்தாள். "மணியைப் பார்த்தீங்களா? எட்டே முக்கால். யாரோ என்னமோ பேசிட்டு போகட்டும். போய் மொதல்ல விசாரியுங்க."

ராமநாதன் தெருமுனைக்கு போய் ஆட்டோ ஒன்றைப் பிடித்து கோகுலம் காலனியில் இருந்த மாலினி வீட்டுக்கு- அடுத்த பத்து நிமிடத்தில் போய்ச் சேர்ந்து கதவைத் தட்டினார்.

டி.வி.யில் தலைப்புச் செய்திகளை வாசித்துக்கொண்டு இருப்பது காதில் விழுந்தது. மாலினியே வந்து கதவைத் திறந்தாள். மலர்ந்தாள்.

"வாங்க சார்."

வேட்டியை சரியாய் கட்டிக்கொண்டு- உள் அறையிலிருந்து வெளிப்பட்ட மாலினியின் அப்பா புன்னகையுடன் ராமநாதனை வரவேற்று நாற்காலியைக் காட்டினார்.

ராமநாதன் உட்கார்ந்துகொண்டே– மாலினியை இயல்பாய் பார்த்தபடி கேட்டார். "ஏம்மா... இன்னிக்கு ஸ்பெஷல் வகுப்பு எத்தனை மணி வரை இருந்தது?"

"எப்பவும் போலத்தான் ஆறரை மணி வரைக்கும்."

"வனிதா ...?" என்று ஆரம்பித்தவரை- பாதியிலேயே குறுக்கிட்டு கேட்டாள் மாலினி. "வனிதா ஏன் சார் இன்னிக்கு ஸ்பெஷல் வகுப்புக்கு வரலை?"

ராமநாதன் திடுக்கிட்டு நிமிர்ந்தார்.



# 3

அந்த ஆல்பத்தை வாங்கிக்கொண்டு இருவரும் புரட்டினார்கள். ஒவ்வொரு பக்கத்திலும்- ஒவ்வொருத்தி சிரித்தாள். பற்களைக் காட்டிக்கொண்டு, தொப்புளை காட்டிக்கொண்டு விதவிதமான சிரிப்புகள்.

ஆல்ப ஆசாமியிடம் ஒருவன் கேட்டான்:

"இதில் இருக்கிற எல்லா பெண்களுமே ஒட்டல நிர்வாகத்துக்குக் கட்டுப்பட்டவங்கதானா?"

"அப்படின்னு இல்ல சார். வெளியே போய் கூட்டிட்டு வர்றதும் உண்டு. நீங்க ஆல்பத்துல எந்தப் பெண்ணைக் காட்டினாலும் சரி... எண்ணி பத்தாவது நிமிடம் உங்கக் கதவைத் தட்டுவா."

அவர்கள் நிதானமாய்- ஒவ்வொரு பக்கமாய் புரட்டினார்கள்.

"இவ்வளவு வாய்ப்பு உங்களுக்கு எங்கேயும் கிடைக்காது சார். பாருங்க, இதெல்லாம் கல்லூரியில் படிக்கிற பொண்ணுங்க படிச்சுகிட்டே இந்தத் தொழிலை பகுதி நேரமா பார்க்குதுங்க! இந்தப் பெண்ணை அனுப்பட்டுமா சார்? நேர்ல பார்க்கிறதுக்கு மாதுரிதீட்சித் மாதிரி இருப்பா."

"நீ கொஞ்ச நேரம் பேசாம இருப்பா. நாங்களே தேர்வு பண்ணி சொல்றோம்."

"சரி சார்" எனச் சொல்லிவிட்டு அவன் காத்திருக்க- ஐந்து நிமிடங்களுக்குப் பின் ஒரு போட்டோவைத் தொட்டுக் காட்டினான்.

"இவளைக் கொண்டா."

படத்தைப் பார்த்த அந்த ஆசாமி சற்று தடுமாற்றக் குரலில் "இவளா?" என்றான்.

திடுக்கிட்டு மாலினியைப் பார்த்த ராமநாதன்- குரல்

பிசிறடிக்கக் கேட்டார்:

"நீ என்னம்மா சொல்றே? வனிதா ஸ்பெஷல் வகுப்புக்கு வரலையா?"

"வரலை சார்."

"மத்தியானம் வழக்கமான வகுப்புக்கு வந்தாளா?"

"வந்தா... சாயந்தரம் நாலஸ்ரை மணிக்கு வகுப்பு முடிஞ்சதும் கான்டீனுக்குப் போயிட்டு ஸ்பெஷல் வகுப்புக்கு வருவாள்னு நினைச்சேன். வரவேயில்லை. உங்ககிட்டே ஸ்பெஷல் வகுப்புக்கு போறதா சொன்னாளா?"

"இல்லேம்மா! இன்னும் அவ காலேஜில் இருந்து வீடு திரும்பவே இல்லை."

"என்ன சார் சொல்றீங்க?"

"ஆமாம்மா! வனிதா இன்னும் வீட்டுக்கு வரலை. உன்னைக் கேட்டா விவரம் தெரியும்னுதான் புறப்பட்டு வந்தேன்."

மாலினியின் அப்பா குறுக்கிட்டார்.

"வேறு யாராவது தோழி வீட்டுக்குப் போயிருப்பாளோ?"

"போயிருக்கமாட்டா... அப்படியே போயிருந்தாலும் இவ்வளவு நேரம் வரை இருக்கமாட்டா."

"அப்படின்னா இந்த விஷயத்தை... நீங்க சீரியசா எடுத்துக்கணும். ஏன்னா... காலம் இப்ப ரொம்ப கெட்டுக்கிடக்கு. போலீஸ்ல தகவல் கொடுக்கிறது நல்லது."

"போலீசா...?"

"போலீஸ்ன்னா ஏன் பயப்படுறீங்க? அவங்க நமக்கு உதவி பண்ணத்தானே இருக்காங்க. நான் வேணும்ன்னா கூட வர்றேன். எனக்கு தெரிஞ்ச இன்ஸ்பெக்டர் ஒருத்தர் இருக்கார். ஸ்டேஷன்கூட பக்கம்தான்."

"எதுக்கும் வீட்டுக்குப் போய் வனிதா வந்துட்டாளான்னு பார்த்துட்டு அப்புறம் போலீசுக்குப் போலாம்."

"உங்க வீட்டுல போன் இருக்கா?"



"இல்ல- பக்கத்து வீட்டுல இருக்கு."

"அப்படின்னா- இந்தத் தெரு முனையில் இருக்கிற போன் பூத்திலிருந்து அங்கே போன் பண்ணி- உங்க மனைவியை வரவழைச்சுப் பேசலாமே?"

ராமநாதன் தலையாட்டிவிட்டு- தெருமுனைக்கு வந்து அங்கிருந்த பொது தொலைபேசியில் தன் பக்கத்து வீட்டு தொலைபேசியை உசுப்பி- சாவித்திரியை கூப்பிட்டு விசாரித்தார்.

சாவித்திரி அழுகையோடு குமுறினாள்.

"அந்தப் பாவி பொண்ணு இன்னும் வரலீங்க."

"சரி... நான் போலீஸ்ல புகார் கொடுத்துட்டு வர்றேன்."

"போலீசா? வேண்டாங்க. ஊர் பூராவும் மானம் போயிடும்."

"அதுக்காக சும்மா இருந்துட முடியுமா? ஒரு புகாரை கொடுத்துட்டு நாமும் தேடுவோம்."

ரிசீவரை வைத்துவிட்டு, மாலினியின் வீட்டுக்கு வந்தார், ராமநாதன். வனிதா இன்னும் வீடு திரும்பவில்லை என்கிற விஷயத்தைச் சொல்லி- மாலினியின் அப்பாவோடு போலீஸ் நிலையத்துக்குப் புறப்பட்டார்.

இன்ஸ்பெக்டர் சந்தானம், மாலினியின் அப்பாவைப் புன்னகையோடு வரவேற்று- நாற்காலிகளைக் காட்டினார்.

"என்ன விஷயம்?"

"இவர் மிஸ்டர் ராமநாதன். குடும்ப நண்பர். கல்லூரிக்குப் போன இவரோட பெண் வனிதா இன்னும் வீடு திரும்பலை."

"யாராவது தோழிங்க வீட்டுக்குப் போயிருக்கலாம். விசாரிச்சுப் பார்த்தீங்களா?"

"எந்தத் தோழி வீட்டுக்கும் அவ போகமாட்டா, இன்ஸ்பெக்டர்."

"எந்த கல்லூரியில் படிக்கிறா உங்க பொண்ணு?"

"அரசு கலைக்கல்லூரி. மாலினியோட 'கிளாஸ்மேட்'தான். இன்னிக்கு ஸ்பெஷல் வகுப்பு இருந்திருக்கு. ஆனா, வனிதா ஸ்பெஷல் வகுப்புக்கே போகலை. வழக்கமான வகுப்பு முடிஞ்சதும் கான்டீன் போனவ திரும்பவே இல்லைன்னு மாலினி சொல்றா."

"வனிதா நகை ஏதாவது போட்டிருந்தாளா?"

"காதில் தோடு, கழுத்தில் ஒரு செயின்..."

"எவ்வளவு தேறும்?"

"அஞ்சு பவுன்."

"நீங்க புகார் எழுதி கொடுத்துட்டுப் போங்க. நான் வேண்டிய நடவடிக்கை எடுக்கிறேன். வனிதாவோட 'போட்டோ'வை மட்டும் உடனடியா கொடுத்துவிடுங்க."

இன்ஸ்பெக்டர் அசுவாரசியமாய் சொல்லிவிட்டு– சிகரெட் ஒன்றைப் பற்றவைத்துக்கொண்டார்.

## 4

அந்த இரண்டு பேரும் ஆச்சரியமாய் நிமிர்ந்தார்கள்.

"ஏன்... இவளுக்கு என்ன?"

ஆல்ப ஆசாமி தயக்கத்தோடு சொன்னான்: "இந்தப் பொண்ணுக்கு கொஞ்சம் 'டிமாண்டும், ரேட்டும் அதிகம். அவ்வளவு சுலபத்தில் கிடைக்கவும்மாட்டா."

"எங்களுக்கு இவளைத்தான் பிடிச்சிருக்கு. இவ பேரென்ன?"

"ரீட்டா."

"தொழிலுக்காக வைச்சுகிட்ட பேரா? இல்ல... அப்பா, அம்மா வைச்ச பேரா?"

"எப்படி இருந்தா என்ன சார்? ரீட்டான்னு கூப்பிட்டா



திரும்பிப் பார்ப்பா... நீங்க எதுக்கும் ஆல்பத்தைப் பார்த்து இன்னொரு பெண்ணையும் தேர்வு பண்ணிடுங்களேன்."

"எதுக்கு?"

"ஒருவேளை ரீட்டா கிடைக்கலைன்னா– இன்னொருத்தியை அனுப்பி வைக்கலாமே?"

"இல்ல... எங்களுக்கு இவளைத்தான் பிடிச்சிருக்கு."

"அனுப்புறதா இருந்தா இவளை அனுப்பு. இல்லேன்னா வேண்டாம்."

"அது... வந்து சார்..."

"பணத்தைப் பத்தி கவலைப்படாதே! 'அட்வான்ஸ்' எவ்வளவு வேணும்?" ஒருவன் பர்சைப் பிரித்து– கைக்கு கிடைத்த நூறு ரூபாய் நோட்டுகளை உருவி– ஆல்ப ஆசாமியின் கையில் திணித்தான்.

அவன் தன் பாழடைந்த பற்களைக் காட்டிச் சிரித்தான்.

"எப்படியும் கொண்டுவந்துடுறேன் சார்."

மறுநாள் காலை எட்டு மணி.

இன்ஸ்பெக்டர் சந்தானம், சப்–இன்ஸ்பெக்டர் கார்த்திகேயன் இருவரும் மாலினியின் வீட்டுக்கு வந்தார்கள். குளித்து, சாப்பிட்டு, கல்லூரிக்கு புறப்பட்டுப் போக தயாராக இருந்த மாலினியிடம் வனிதாவைப் பற்றி விசாரித்தார்கள்.

"வனிதாவைக் கண்டுபிடிக்க நேத்து ராத்திரி பூராவும் தீவிர நடவடிக்கைகள் எடுத்தும் முடியலை. நீ கொடுத்த எல்லா தோழிங்க வீட்டு முகவரியிலும் போய்ப் பார்த்துட்டோம். எந்தப் பயனும் இல்லை. ஏம்மா மாலினி! வனிதாவை நேத்து நீ கடைசியா எத்தனை மணிக்கு பார்த்தே?"

"நாலரை மணிக்கு சார்."

"கல்லூரி முடிஞ்சு எவ்வளவு நேரம் கழிச்சு ஸ்பெஷல்





வகுப்பு ஆரம்பமாச்சு?"

"அரை மணி நேரம்."

"அந்த இடைவெளி நேரத்துலதான் நீ அவளை பார்த்திருக்கே?"

"ஆமா சார்! கல்லூரி முடிஞ்சதும் காப்பி குடிச்சிட்டு வரப்போறதா சொல்லிட்டுக் கிளம்பினா."

"கூட நீ கிளம்பலையா?"

"நான் டீ, காப்பி எதுவும் குடிக்கிறதில்லை. அதனால் நான் எப்பவும் கான்டீன் போகமாட்டேன்."

"போனவ திரும்பி வரவே இல்லை.. அப்படித்தானே?"

"ஆமா."

"கல்லூரிக்கு உள்ளே கான்டீன் இருக்கா?"

"கல்லூரிக்குள்ளே ஒரு கான்டீன் இருக்கு. ஆனா, நிறைய பேர் வெளியே போய்த்தான் சாப்பிட்டுட்டு வருவாங்க."

"வனிதா?"

"வனிதாவும்தான்."

"வெளியே எந்த ஓட்டல்?"

"கவிதா காப்பி பார்'ன்னு ஒரு ஓட்டல்."

"வனிதாவோட போக்கு எப்படி?"

"நல்லவ சார்."

"காதல் விவகாரம் ஏதாவது?"

"நிச்சயமா இல்லை. இருந்திருந்தா எனக்கு கண்டிப்பா தெரிஞ்சிருக்கும்."

இன்ஸ்பெக்டர் சந்தானம் விசாரித்துக்கொண்டிருக்கும் போதே- வீட்டு வாசலில் ஒரு ஆட்டோ வந்து நிற்க-

அதிலிருந்து ராமநாதனும், சாவித்திரியும் இறங்கினார்கள். சாவித்திரியின் கண்கள் அழுதழுது ரத்தச் சிவப்பாய் இருந்தன. மாலினியைப் பார்த்ததும் புதிதாய் அழுதுகொண்டே கேட்டாள்.

"ஏம்மா மாலினி... அவ உன்கிட்டே ஏதாவது சொல்லிட்டுப் போனாளா?"

"வனிதா என்கிட்டே எதுவுமே சொல்லலைம்மா."

ராமநாதன், இன்ஸ்பெக்டரிடம் சொன்னார்: "சொந்தக்காரங்க வீட்ல, தெரிஞ்சவங்க வீட்ல... இப்படி எல்லா பக்கமும் விசாரிச்சுப் பார்த்துட்டோம். வனிதா எங்கேயும் இல்லை."

"நீங்க ஏதாவது அவளை கண்டிச்சீங்களா ராமநாதன்?"

"இல்லையே... நானும் சரி... என் மனைவியும் சரி... வனிதாவை அதிர்ந்து பேசமாட்டோம்."

"ஏதாவது சம்பவம் நடந்திடுச்சா?"

சப்-இன்ஸ்பெக்டர் கார்த்திகேயன் குறுக்கிட்டார். "சார்! வனிதா கடைசியா அந்த கவிதா காப்பி பார்க்கு போயிருக்கா. அங்கே விசாரிச்சா ஏதாவது தகவல் பெறலாம்."

இருவரும் ராமநாதன், சாவித்திரிக்கு தைரிய வார்த்தைகளை சொல்லிவிட்டு பைக்கில் கிளம்பினார்கள்.

கல்லூரிக்கு எதிரே இருந்த காப்பி பார்க் வந்தபோது கூட்டம் சற்று குறைவாக இருந்தது. ஸ்பீக்கரில் இளையராஜா 'பாட்டாலே புத்தி சொன்னார்...' என்று பாடிக்கொண்டு இருந்தார்.

சந்தானமும் கார்த்திகேயனும் 'பைக்'கைவிட்டு இறங்கி- கல்லாவில் இருந்த நபரை நெருங்க- அவன் எழுந்து நின்றான். நெற்றியில் இருந்து சந்தனக்கீற்று- அவன் பாலக்காட்டு ஆசாமி என்பதைச் சொல்லிற்று.

"சாரே..." கண்களில் பயம்.

"பயப்படாதே! ஒரு சின்ன விசாரணை. எதிர் கல்லூரி மாணவிகள் இங்கேதான் டீ, காப்பி குடிக்க வருவாங்களா?"

"ஆமா சாரே..."

"வழக்கமா வர்றவங்களை உங்களுக்குத் தெரிஞ்



சிருக்கேணுமே?"

"ஓரளவு தெரியும் சாரே..."

சந்தானம் தன் கையிலிருந்த வனிதாவின் படத்தை அவனிடம் காட்டிக் கேட்டார். "இந்தப் பெண்ணை உனக்குத் தெரியுமா?"

"தெரியும் சாரே! நம்ம கடையில 'அக்கவுண்ட்' வைச்சிருக்கு."

"நேத்து சாயந்திரம் இந்தப் பொண்ணு இங்கே காப்பி குடிக்க வந்ததா?"

"ஒரு நிமிடம் சாரே!" என்றவன், உள்ளே பார்த்து குரல் கொடுத்தான்.

"ஏய் கோபீ! இவிட வரூ..."

கரத்தை வேட்டியில் துடைத்துக்கொண்டே- அழுக்கு பனியனோடு ஒருவன் உள்ளே இருந்து வந்தான். அவனிடமும் கேரள மணம் அடித்தது.

"சாரே... இவன்தான் சப்ளையர். இவனைக் கேட்டா தெரியும்."

சந்தானம் அவனிடம் கேட்டார். "சாயந்தரம் இந்த வனிதா இங்கே காப்பி குடிக்க வந்தாளா?"

அவன் படத்தைப் பார்த்துவிட்டு தலையாட்டினான்.

"வரலை சாரே..."

"நல்லா யோசிச்சுச் சொல்லு."

"எனக்கு நன்னாயிட்டு தெரியும் சாரே... வனிதா வரலை. சந்தேகம் இருந்தா ஈ புஸ்தகம் நோக்கு" சொன்னவன் 'அக்கவுண்ட்' புத்தகத்தைப் புரட்டிக் காட்டினான்.

வனிதா என்று எழுதப்பட்ட பக்கத்திற்கு கீழே- அந்த மாதத்திய தேதிகளில் அவள் காப்பி குடித்தது பதிவாகியிருக்க- நேற்றைய தேதியில் எதுவும் குறிக்கப்படாமல் இருந்தது.

"என்னா- பிரோப்ளம் சாரே?" –கடை முதலாளி கேட்டான்.

சந்தானம் சொன்னார்: "இந்த வனிதாவை நேத்து சாயந்திரத்தில இருந்து காணோம்னு புகார் பண்ணி இருக்காங்க."

"அடப்பாவமே..."

கார்த்திகேயன் மெல்ல சந்தானத்தை ஏறிட்டார். "சார்... கல்லூரியில் இருந்து வனிதா காப்பி பார்க்கு வர்றதுக்குள்ளே ஏதோ நடந்திருக்கு."

"அந்த பகல் நேரத்துல என்ன நடந்திருக்க முடியும்?"

"பலாத்காரம் நடந்திருக்க வாய்ப்பில்லை சார். அவகிட்டே ஏதாவது ஒரு பொய்யைச் சொல்லி ஏமாத்தி கூட்டிப்போயிருக்க முடியுமே?"

"அப்படி இல்லாதபட்சத்தில் அவளாகவே யார்கூடவாவது போயிருக்கலாம்."

"இருக்கலாம்."

இருவரும் பேசிக்கொண்டிருந்தபோது– காப்பி பார் உரிமையாளர் குறுக்கிட்டான். "சாரே! ஒரு விஷயம்..."

"என்ன?"

"நான் சொன்னேன்னு வெளியே தெரிய வேண்டாம்... மாரியப்பனை உங்களுக்குத் தெரியுமா?"

"மாரியப்பனா?"

"பொம்பளை புரோக்கர் சார்."

"அவனா? தெரியும், சொல்லு."

"அந்த மாரியப்பன் நேத்து பூராவும் இந்தப் பக்கமேதான் சுத்திட்டு இருந்தான். அவன் பார்வையே சரியில்லை. ஏதோ காரியத்தோடுதான் இங்கே அலைஞ்சிட்டிருந்தான்."

"மாரியப்பன்?"

லேசாய் பிடி கிடைத்த உணர்வில் ஒருத்தரையொருத்தர் பார்த்துக்கொண்டார்கள்– சந்தானமும், கார்த்திகேயனும்.



# 5

ஆட்டோ, ஓட்டல் போர்டிகோவுக்குள் நுழைந்து நின்றது. உள்ளே இருந்த ரீட்டாவும்– அந்த ஆசாமியும் இறங்கினார்கள். அவன் கட்டணத் தொகையைக் கொடுத்து ஆட்டோவை அனுப்பிவிட்டு ஓட்டலுக்குள் போக– ரீட்டா அவனைத் தொடர்ந்தாள்.

"ஆளுங்க எப்படி?" என்றான்.

"பசையுள்ள ஆசாமிங்களாத்தான் தெரியுது. நிறைய பணம் புரளுது. நீ கொஞ்சம் இதமா– பதமா நடந்துகிட்டா ஏகப்பட்டதைக் கறந்துடலாம்."

ரீட்டா சிரித்தாள்.

"நீ எனக்கு சொல்லித்தரவே வேண்டாம்."

"அங்கே என்ன சொல்லிட்டு வந்திருக்கே ரீட்டா?"

"ஒண்ணுமே சொல்லாம வந்துட்டேன். இந்நேரம் அங்கே என்னை எல்லோரும் தேடிட்டிருப்பாங்க."

"அப்புறம் போய் சமாளிச்சுக்கலாம் இல்லையா?"

"ம்... ம்..."

வெளிச்சமான வரவேற்பு பகுதியைக் கடந்து– லிப்டை அடைந்தார்கள். 'லிப்ட்' வேறு ஏதோ தளத்தில் இருக்க– சொற்ப விநாடிகள் காத்திருந்தார்கள். 'லிப்ட்' கீழே வந்ததும் உள்ளே நுழைந்து, முதல் தளத்தைத் தொட்டார்கள்.

அறை எண் 169–ஐக் காட்டினான், அவன்.

"இந்த அறைதான் ரீட்டா. பார்த்து நடந்துக்க, நான் வரட்டுமா? காலையில் வந்து பார்க்கிறேன்."

"சரி."

அவன் மீண்டும் 'லிப்ட்'டை நோக்கிப் போக–

169-ன் கதவை நெருங்கி- அதன் உச்சந்தலையில் இருந்த அழைப்புமணி பொத்தானை அழுத்தினான்.

"டிங்.. டாங்க்.."

சில விநாடிகளுக்குப் பின் கதவு திறந்தது.

புன்னகையோடு உள்ளே போனவன்- சட்டென்று முகம் மாறினான். புன்னகை அவசர அவசரமாய் அவனிடமிருந்து விடைபெற- 'லிப்ஸ்டிக்' பூசிய உதடுகள் அதிர்ச்சியில் பிரிந்தன.

"நீ.. நீங்களா?" என்றாள்.

போலீஸ் வாகனம் தார் சாலையைப் புறக்கணித்து, மேடு பள்ளங்களில் குதித்து செம்மண் பாதைக்குள் புகுந்தது. நிறைய குடிசைகள் முளைத்திருந்த சேரிப் பகுதி. அது. குறிப்பிட்ட ஒரு கட்சியின் கொடிகள் எல்லா திசையிலும் பறந்தன. நற்பணி மன்ற போர்டுகளில் கமல், ரஜினி சிரித்தார்கள். கோவில் விழாவில் ஒலிபெருக்கி 'சலாம் குலாமு.. குலாமு.. சலாம் குலாமு' என்றது.

பைக்கை நிறுத்தி- ஒரு குடிசையின் முகப்பில் குத்திட்டு உட்கார்ந்திருந்து பீடி புகைத்துக்கொண்டிருந்த லுங்கி பேர்வழியைக் கைதட்டி கூப்பிட்டான், சந்தானம்.

அவன் பீடியை எறிந்துவிட்டு ஓடி வந்தான்.

"அய்யா.."

"மாரியப்பனோட வீடு எது?"

"மாரியப்பனா?"

"அதான்.. 'பிம்ப்'.. அந்த பொம்பள புரோக்கர்.."

"அவனா? அங்க லாந்தர் கம்பம் தெரியுது பாருங்க.. அந்தக் குடிசைதான்."

'பைக்'கை அந்தக் குடிசைக்கு விரட்டி- வாசலில் நிறுத்திவிட்டு கதவைத் தட்டினார்கள். "ஏய், வீட்ல யாரு?"

சில விநாடி அமைதிக்குப் பிறகு- கதவு லொடலொடவென்று



திறந்துகொள்ள- சர்க்குச்சியாய் ஒரு பெண் வெளியே வந்தாள்.

"ஆரு?"

"மாரியப்பன் இருக்கானா?"

போலீசைப் பார்த்து பயந்துபோன அவள்- அவசர அவசரமாய் "இல்லீங்க" என்றாள்.

"நீ யாரு?"

"அவர் சம்சாரமுங்க."

"உம் புருஷன் எங்கே போயிருக்கான்?"

"வெளியூர் போயிருக்குதுங்க"

கார்த்திகேயன் குடிசைக்குள் எட்டிப் பார்த்துவிட்டு உறுமினார். "பொய் சொல்லாதே! நேத்து சாயந்தரம் அவனை கல்லூரிப் பக்கம் பார்த்தோம். நிஜத்தைச் சொல்லு.. அவன் எங்கே போயிருக்கான்?"

"வந்து.. வந்து.."

"சொல்லு."

"வந்து... ஏதோ... ஓட்டலுக்குப் போறதாச் சொல்லுச்சிங்க."

"எந்த ஓட்டல்?"

"அது தெரியலீங்க."

"பொய் சொன்னா ஸ்டேஷனுக்குக் கொண்டு போயிடுவோம்."

"இல்லீங்க.. இந்தத் தாலி சத்தியமா எனக்குத் தெரியாதுங்க" சொன்ன அவள் கண்களில் உண்மை தெரிந்தது.

"இதோ பார்.. உன் புருஷன் எப்ப வந்தாலும் சரி, உடனே போலீஸ் ஸ்டேஷனுக்கு வரச்சொல்லணும்."

"சரிங்க."

'பைக்'குக்கு வந்து, அதை விரட்டி- பத்தடி தூரம் வந்ததும்

கார்த்திகேயன் சொன்னார்: "சார்– இங்கே ஒரு 'மப்டி'யை போட்டுரலாம். ஆள் வந்தா அமுக்கிட்டு வரட்டும்."

'பைக்' வேகமாக ஓடி குடிசைகளைக் கடந்து– மறுபடியும் மண் சாலைக்கு வந்து தார் ரோட்டை எட்டிப் பிடித்தது. சந்தானம் சொன்னார்: "ரெண்டு மாசத்துக்கு முந்தி இதே மாதிரிதான் கல்லூரியில் இருந்து ஒரு பொண்ணு காணாமே போனா. இதுவரைக்கும் அவ கிடைக்கலை. எங்கே போனாங்கிற விவரமும் தெரியலை..."

"வனிதா அழகா இருப்பா. யாராவது கடத்தி இருக்கலாம்கிறது என்னோட எண்ணம் சார்" பேசிய கார்த்திகேயன 'திடும்'மென்று கத்தினார்.

"சார்... கொஞ்சம் 'பைக்'கை நிறுத்துங்க."

சந்தானம் சட்டென்று 'பிரேக்'கை பிரயோகித்து நிறுத்தினார். 'பைக்' நின்றதும்– கார்த்திகேயன பில்லியனிலிருந்து கீழே குதித்து– சாலையோரமாய் சொற்ப தூரத்தில் புன்னகையோடு போன ஆசாமியைப் பிடித்தார்.

"டேய்... நீ மாரியப்பன்தானே?"

அவன் மிரண்டு ஓட முயல– கார்த்திகேயன் சட்டை காலரைப் பிடித்து நிறுத்தினார்.

"ராஸ்கல்! ஓடவா பார்க்கிறே? நீ மாரியப்பன்தானே?"

"ஆ– ஆமா சார்."

சந்தானம் 'பைக்'கை நிறுத்திவிட்டு ஓடி வந்தார்.

"சார்... இவன்தான் அந்த மாரியப்பன்."

சந்தானம் கண்களில் கோபத்தை நிரப்பிக்கொண்டு அவனை ஏறிட்டார். "எங்கேடா போயிட்டு வர்றே?"

"ச– சார்... வந்து... வந்து..."

"சொல்லு."

"என்– என் தொழிலைக் கவனிச்சிட்டு வர்றேன் சார்."

"ஏதோ ஓட்டலுக்குப் போனதா உன் பொண்டாட்டி



சொன்னா?"

"ஆமா சார். ஒரு– ஒரு பொண்ணைக் கொண்டுபோய் ஓட்டல்ல விட்டுட்டு வர்றேன் சார்."

"யார் அந்தப் பொண்ணு?"

"சரசா."

"எந்த ஓட்டல்ல கொண்டுபோய் விட்டே?"

"பாண்டி விலாஸ் ஓட்டல் சார்."

"இன்னிக்கு சாயந்தரம் கல்லூரிப் பக்கம் உன்னைப் பார்த்ததா சொன்னாங்களே?"

அவன் நிமிர்ந்தான்.

"ஆ– ஆமா சார்."

"அங்கென்ன வேலை உனக்கு?"

"சரசா திடீர்னு வீட்டை மாத்திட்டா சார்! அவ அந்தப் பகுதியில்தான் சுத்திட்டு இருப்பான்னு எனக்குத் தெரியும்! அவளைக் கண்டுபிடிக்கிறதுக்காகத்தான் இன்னிக்குப் பூராவும் அந்தப் பகுதியில அலைஞ்சிட்டிருந்தேன்."

அவனை சில விநாடி உற்றுப் பார்த்துவிட்டு– சந்தானம் கேட்டார்:

"வனிதாவை தெரியுமா, உனக்கு?"

"வனிதாவா?"

"தெரியாது சார்."

"இந்தப் பொண்ணு கலைக்கல்லூரியிலே படிக்குது. நேத்திக்கு சாயந்திரத்தில் இருந்து காணோம். நேத்திக்குப் பூராவும் நீ அந்த கல்லூரி பக்கம்தான் இருந்திருக்கே" சந்தானம் சொல்லச் சொல்ல–

மாரியப்பன் பதறி நடுங்கினான்.

"சார்– எனக்கெதுவும் தெரியாது சார்! பொண்ணுங்களைக் கடத்துறது பெரிய விவகாரம். அந்தத் தைரியம் நமக்கு வராது

சார். நீங்க சொல்ற பெண்ணை எனக்குத் தெரியவே தெரியாது சார்."

கையெடுத்துக் கும்பிட்டான்.

## 6

ரீட்டாவின் கண்களில் படர்ந்த கலவரம் அவசரமாய் மூளைக்கும் எட்டிவிட- உடனே கதவை நோக்கித் திரும்பினாள்.

அதற்குள்-

ஒருவன் வேகமாய்ப் பாய்ந்து ரீட்டாவைக் கட்டிப்பிடித்து, படுக்கையில் தள்ளினான். மீண்டும் அவள் எழுவதற்குள்-

கதவை நிதானமாய்ப் பூட்டி- சாவியை எடுத்துக் கொண்டான், அவன்.

இன்னொருத்தன் புன்னகையோடு அவளைப் பார்த்தான்.

"இந்த அறையில் எங்ககிட்டே வந்து வசமா மாட்டிப்போம்னு நீ கனவில்கூட நினைச்சுப் பார்த்திருக்க மாட்டே... இல்லையா ரீட்டா?"

ரீட்டா எச்சில் விழுங்கினாள். முகம் பூராவும் வியர்வை மினுமினுத்தது.

அவன் தொடர்ந்தான்.

"அந்த புரோக்கர்கிட்டே சலவை நோட்டை எறிஞ்சு உன்னை இங்கே வரவழைச்சது அனுபவிக்க இல்லை. ஒரே ஒரு விவரத்தை மட்டும் உன்கிட்டே இருந்து தெரிஞ்சுக்கிறதுக்காகத்தான்."

ரீட்டா குரல் பிசிறடிக்கக் கேட்டாள்.

"உ- உங்களுக்கு என்ன விவரம் வேணும்...?"

"விஜய்தர்மா இப்ப எங்கிருக்கான்?"



சாவித்திரி அழுது அழுது உலர்ந்து போயிருந்தாள்.

வனிதாவின் ஞாபகம் உச்சமடைகிறபோதெல்லாம் அவளை அறியாமல் கண்களில் நீர் பிரவாகமெடுத்து கன்னங்களில் வழிந்தது. ராமநாதன் இரண்டு நாளாக விடுமுறை போட்டுவிட்டு, ஈஸிசேரில் உட்கார்ந்து- விட்டத்தை வெறித்தபடியே கவலையோடு நிமிடங்களைக் கரைத்தார்.

மாரியப்பனுக்கு வனிதா காணாமல்போனதுக்கும் எந்த சம்பந்தமுமில்லை என்று தெரிந்த பிறகு போலீஸ் விசாரணையில் தேக்கம் விழுந்துவிட்டது. சில பழைய கேடிகளை பிடித்து விசாரிப்பதும், விடுவிப்பதுமாக இரண்டு நாட்கள் நகர்ந்துவிட்டன. வனிதாவைப் பற்றி எந்தத் தகவலும் பெயரவில்லை.

சாவித்திரி, ராமநாதனைக் கூப்பிட்டாள். "என்னங்க..."

"ம்..."

"ஸ்டேஷனுக்குப் போய் இன்ஸ்பெக்டர்கிட்டே ஏதாவது தகவல் வந்ததான்னா விசாரிச்சுட்டு வாங்களேன்."

"அவரே 'ஏதாவது தகவல் கிடைச்சா உங்களுக்குச் சொல்லி அனுப்புறோம். நீங்க வீணா ஸ்டேஷனுக்கு அலைய வேண்டாம்'னு சொல்லிட்டார், சாவித்திரி! அவரை தொந்தரவுப்படுத்தறதுல எந்த பயனும் இல்லை" என்றவர்- ஒரு நிமிடம் கழித்துச் சொன்னார்:

"பத்திரிகையிலேயும், டி.வி.யிலும் விளம்பரம் கொடுத்துப் பார்க்கலாமான்னு கேக்கிறார்."

சாவித்திரி பதறிப்போய் தலையை ஆட்டினாள்.

"வேண்டாங்க... ஊர் பூராவும் தெரிஞ்சுடும்."

"நானும் அதைத்தான் இன்ஸ்பெக்டர்கிட்டே சொன்னேன்... 'செய்யவேண்டிய எல்லா முயற்சியுமே பண்ணிப் பார்த்தாச்சு. பொண்ணு திரும்பக் கிடைக்கிறது நமக்கு முக்கியமில்லையா?'ன்னு கேக்கிறார்."

சாவித்திரி யோசனையோடு அவரைப் பார்த்த

அதே விநாடி-

"சார் தபால்..."

வாசலில் குரல் கேட்டதைத் தொடர்ந்து- ஒரு நீளமா தபால் தரையில் தவழ்ந்து வந்தது.

ராமநாதன் எழுந்து அதை எடுத்தார்.

அனுப்பியவரின் முகவரியைப் பார்த்தார்.

கண்களில் திகைப்பு நிரம்பிக்கொண்டது.

கடிதம்-

வனிதாவிடமிருந்து!

## 7

அவன் மீண்டும் கேட்டான்.

"சொல்லு.. விஜய்தர்மா எங்கிருக்கான்?"

கண்களில் பொய் தவழ- இடவலமாய்த் தலையாட்டினா ரீட்டா.

"எ... எனக்கு தெரியாது..."

"இப்படி ஒத்தைவரியில் பதில் சொல்லி எங்ககிட்ட இருந் நீ தப்பிக்க முடியாது. அவன் எங்கிருக்கான்னு உனக் நிச்சயமாத் தெரிஞ்சிருக்கணும்."

"நான் அவனைப் பார்த்தே பல மாசமாச்சு."

"அப்படின்னா அவன் இந்த ஊரில் இல்லை... வெளியூர் இருக்கான்னு சொல்றியா?"

"தெரியலை..."

அவர்களில் ஒருத்தன் கோபமானான்.

"இங்க பாரு ரீட்டா... நீயும், அவனும் எப்படி நெருக்கம பழகினீங்கன்னு எனக்கு ரொம்ப நல்லாத் தெரியும். அவனை



பார்க்காம நீயோ, உன்னைப் பார்க்காம அவனோ ஒருநாள்கூட இருக்க முடியாதுங்கிறது தெரியும். வெளியூரில் இருந்தால்கூட அவன் உனக்கு போன் பண்ணாம இருக்கமாட்டான். சொல்லு- இப்ப அவன் எங்கிருக்கான்?"

ரீட்டா குறுக்கிட்டுக் கத்தினாள்.

"நான் பத்தினி இல்லை.. உயிருக்கு உயிரா ஒருத்தனோடு பழகிறதெல்லாம் எனக்குத் தெரியாது. யாருக்கு வேணா முந்தானையை விரிக்கிறவ! நான் விஜய்தர்மாவை மறந்து மாசக் கணக்காச்சு."

"உங்க காதல் தெய்வீக காதலாச்சே! விஜய்தர்மா உன் மனசைத்தான் காதலிக்கிறதா என்கிட்ட பல தடவை பெருமையடிச்சி இருக்கான்."

"அதெல்லாம் சும்மா.. என்கிட்டே கூட அவன் அப்படித்தான் பேசி, என் மனசுல சலனத்தை உண்டுபண்ணினான். இப்ப என்னையும் மறந்துட்டு எங்கேயோ போயிட்டான். அவன்கிட்ட நீங்க மட்டும் ஏமாறலை. நானும்தான் ஏமாந்திருக்கேன்."

அவர்கள் இருவரும் ஒருத்தரையொருத்தர் பார்த்துக் கொண்டார்கள்.

"பார்த்தியா... ரீட்டா எவ்வளவு அழகா கதைவிடுறா?"

"கதை விவாதத்துக்காக நாங்க இந்த ஓட்டல்ல அறை எடுக்கலை ரீட்டா. உண்மையைச் சொன்னா நீ பிழைப்பே! இப்படி கதை விட்டுட்டு விஜய்தர்மாவைக் காப்பாத்த நினைச்சேன்னா, உன் உடம்பை தொழிலுக்கே லாயக்கில்லாம பண்ணிடுவோம்."

ரீட்டா கண்களில் பயத்துடன் துண்டு துண்டாய் வார்த்தைகளைப் பேசினாள்.

"நிஜத்தைதான் சொல்றேன்... அவனைப் பத்தி எனக்கு தெரியாது..."

"அஹிம்சைக்கு இவ ஒத்துவரமாட்டாடா! அந்த தோல் பையை எடு" கோபத்துடன் ஒருவன் சொல்ல-

கட்டிலின் மேல் கிடந்த தோல்பையை எடுத்து 'ஜிப்'பை திறக்க ஆரம்பித்தான், இன்னொருத்தன்.

**சா**வித்திரி பதட்டமாய்- அவசர நடையில்- ராமநாதனை நெருங்கி வந்தாள்.

"கடிதம் யாருகிட்டே இருந்து வந்திருக்குங்க?"

அவர் பரபரத்துப்போய் உறையை உடைத்துக்கொண்டே சொன்னார்:

"வனிதா எழுதியிருக்கா."

"வனிதாவா? எங்கிருந்து எழுதியிருக்கா?"

"வெறுமனே வனிதான்னு மட்டும்தான் எழுதி இருக்கா. உள்ளே படிச்சுப் பார்த்தா விவரம் தெரியும்."

உறைக்குள்ளிருந்து அந்த மடிக்கப்பட்ட வெள்ளைத் தாளை வெளியே எடுத்தார், ராமநாதன்.

சாவித்திரி மனசில் படபடப்போடு அவர் தோளுக்குப் பின்னால் நின்றுகொண்டு எட்டிப் பார்த்தாள்.

அடித்தல் திருத்தங்களுடன் வனிதாவின் கையெழுத்து கடிதத்தில் நெடுக ஓடியிருந்தது.

**"அன்புள்ள அம்மா, அப்பா ஆகியோருக்கு,**

**வணக்கத்துடன் வனிதா எழுதிக்கொள்வது: இப்பவும் நான் நலமாக இருக்கிறேன். இந்த இரண்டு நாட்கள் நீங்கள் என்னை நினைத்து மிகவும் கவலைப்பட்டு இருப்பீர்கள் என்பதை நான் அறிவேன். சூழ்நிலை தங்களைவிட்டுப் பிரியும்படி என்னைத் தூண்டிவிட்டது. நான் எடுத்த ஒரு முடிவைப் பற்றித் தங்களிடம் தெரிவிக்க பயப்பட்டேன். ஆகவேதான் சொல்லாமல் வீட்டை விட்டு வெளியேறிவிட்டேன்.**

**ஆமாம். நான் ரமேஷ் என்பவரை ஒரு ஆண்டாகக் காதலிக்கிறேன். அவர் ரொம்ப நல்லவர். கல்யாணத்திற்கு அவசரப்பட்டார். எனக்கு உங்களிடம் இதைப்பற்றி சொல்ல பயம். அவர் வீட்டிலும் திருமணத்திற்கு எதிர்ப்பு இருந்தது.**



**ஆகவே, நேற்று முன்தினம் இருவரும் ஒரு கோவிலில் வைத்து உங்களை மனப்பூர்வமாய் வணங்கி திருமணம் செய்துகொண்டோம் (கல்யாண படம் இணைத்துள்ளேன்). ரமேஷ் என்னை இங்கே நல்லவிதமாய் பார்த்துக்கொள்கிறார். நீங்கள் இருவரும் என் மேல் மிகவும் கோபமாக இருப்பீர்கள் என்று எண்ணுகிறேன். உங்கள் கோபம் தணிந்தபின் ஒருநாள் நாங்கள் இருவரும் நேரில் வருகிறோம்.**

**என்றும் உங்கள்**
**ஆசீர்வாதங்களை நாடும்,**
**வனிதா."**

சாவித்திரி குரல் நடுங்க- ராமநாதனைப் பார்த்துக் கேட்டாள்.

"ஏ... என்னங்க இது... வ... வனிதா... இப்படி?"

ராமநாதனுக்குள் கோப ஊற்று ஒன்று புறப்பட்டு மெல்ல மெல்ல உயரச் சீறத் தொடங்கியது.

"இந்தக் கழுதைக்கு என்ன தைரியம் பார்த்தியா? இவளை நினைச்சு மூணு நாளா அன்ன ஆகாரம் இல்லாமே தவிச்சிட்டிருக்கோம். இவ என்ன காரியம் பண்ணி இருக்கா?"

உறையை இன்னமும் பிரிக்க- உள்ளே இருந்து வண்ணப் புகைப்படம் ஒன்று உதிர்ந்தது.

வனிதா பட்டுச்சேலை பளபளக்க- தங்க நகைகள் டாலடிக்க- உதட்டில் மின்னல் மாதிரி ஊஞ்சலாடும் சிரிப்புடன் அந்த இளைஞனுக்கு கழுத்தை நீட்டிக்கொண்டிருந்தாள். பார்த்துவிட்டு சாவித்திரி விம்மினாள்.

"ஒரு வார்த்தை நம்மகிட்டே இதைப்பத்தி சொல்லி இருந்தாள்ன்னா, பையனைப் பத்தி முழுசா விசாரிச்சு ஆகவேண்டியதைப் பார்த்திருக்கலாமே? நமக்கு ஒரே பொண்ணு- இவளோட ஆசையைவிட நமக்கு வேற என்ன முக்கியம்?"

"கழுதை! இதைவிட அவ செத்திருக்கலாம்."

"என்னங்க.. இவ்வளவு அலட்சியமா சொல்றீங்க? அவதான்



சின்னக் குழந்தை. தெரியாத்தனமா தப்புப்பண்ணிட்டான்னா நாம அப்படியே தலைமுழுகிடறதா? இவ எங்கே இருக்கா, சின்ன விவரமெல்லாம் தெரிஞ்சிக்க வேண்டாமா?"

"அவ பண்ணி இருக்கிறது சின்னக் குழந்தைங்க செய்யற காரியமில்லை. இந்தோட அவனை மறந்துரு. நான் இன்ஸ்பெக்டர்கிட்டே இந்த லெட்டரைக் காமிச்சுட்டு- புகாரை வாபஸ் வாங்கிட்டு வர்றேன். இந்த கழுதையைத் தேடி அலைங்க நேரம் வீணாகாமலாவது இருக்கும்." சட்டையை மாட்டிக்கொண்டு- கால்களுக்கு செருப்பைக் கொடுத்த ராமநாதன், விடுவிடுவென போலீஸ் நிலையம் நோக்கிப் போனார்.

## 8

தோல் பையின் 'ஜிப்' பிளந்துகொள்ள- உள்ளுக்குள் மேலாக ஒரு சுருட்டி வைக்கப்பட்ட நைலான் கயிறும். அதற்கு கீழே சில ஆயுதங்களும் கண்ணில் அடித்தன.

"பார்த்தியா ரீட்டா? இதில் இருக்கிற ஆயுதங்களை வைச்சு, உடம்பை என்ன மாதிரியெல்லாம் சித்திரவதை பண்ணலாம்னு உனக்கு தெரியுமா?"

ரீட்டாவின் மனசுக்குள் மெல்ல மெல்ல ஒரு நடுக்கம் தொடங்கியது.

"ஒரு பெண்ணான உன் மேல இதுங்களைப் பிரயோகிக்கணுமான்னு யோசனை பண்ணுறோம்."

"உண்மையைச் சொன்னா நீங்க நம்பமாட்டேங்கிறீங்க. விஜய்தர்மா எங்கே இருக்கான்னு எனக்கு சத்தியமாத் தெரியாது."

"ர்ர்ப்..."

ரீட்டா சற்றும் எதிர்பார்க்காத விநாடியில் அவன் கன்னத்தில்

பளீரென்று அறைந்தான், அவன்.

அவள் கண்களுக்குள் நட்சத்திரம் பறந்தது. கன்னத்தில் இளஞ்சிவப்பாய் விரல் அடையாளம் பதிந்தது.

"சொல்லுடி... எங்கே அவன்?"

"தெ... தெரியாது..."

அவன் மற்றவனைப் பார்த்தான்.

"என்ன பண்ணலாம் இவளை?"

"வேற வழியில்லை. சிகிச்சையை ஆரம்பிச்சுடு."

ரீட்டாவின் இதயம் வேகமாய் தடதடக்கத் தொடங்க— சுற்றும் முற்றும் பார்த்தாள்.

இந்தப் பக்கம் பூட்டப்பட்ட கதவு. மற்ற இரண்டு பக்கமும் கனமாய் தடுப்புச் சுவர்.

அந்தப் பக்கம்...?

இரண்டு கண்ணாடி ஜன்னல்கள்.

முதல் தளத்தில் இருக்கிறோம் என்ற உணர்வு லேசாய்த் தயக்கத்தை ஏற்படுத்தினாலும், உள்மனசு அவளைத் தீவிரமாய்த் தூண்டியது.

'தாண்டு.'

'தப்பி ஓடு.'

விசுக்கென அந்த ஜன்னலுக்குப் பாய்ந்தாள், ரீட்டா.

ஒரு வாரம் வழிந்து போயிருந்தது.

அந்த நாளின் சாயந்தரம்— ராமநாதன் வீட்டுக் கதவு தட்டப்பட்டது.

"யாருன்னு பாரு" என்றார், ராமநாதன். சாவித்திரி எழுந்துபோய் கதவைத் திறந்தாள்.

ஒரு அறிமுகமில்லாத இளைஞன் நின்றுகொண்டிருந்தான். சாவித்திரியைப் பார்த்ததும் கையைக் கூப்பினான்.



"வணக்கம்மா!"

"யாரு வேணும்?"

"இது வனிதாவோட வீடா?" —சாவித்திரி தலை அசைத்ததும் கேட்டான்.

"நீங்க வனிதாவோட அம்மாவா?"

"ஆமா."

"உங்களையும், வனிதாவோட அப்பாவையும் பார்க்கத்தான் வந்தேன்."

"உள்ளே வாங்க தம்பி."

சாவித்திரி அவனை உள்ளே விட்டு— முன் அறையில் அமர வைத்துவிட்டு— பின் அறையில் இருந்த ராமநாதனிடம் விவரம் சொன்னாள்.

"யாரு அது?"

"தெரியலீங்க."

"வனிதாவைக் கேட்டுத்தானே வந்தான்? அவ இல்லைன்னு சொல்லி அனுப்பிடு."

"அவன் நம்மைப் பார்க்கணும்னு சொல்றான்... பார்த்தா நல்ல பையனா தெரியறான்... எதுக்கு வந்திருக்கான்னு தெரிஞ்சுக்கலாம். வாங்க."

ராமநாதன் சலிப்புடன் எழுந்தார்.

"வனிதான்னு பேரைச் சொல்லிட்டு ஒருத்தன் வந்ததுமே நீ இத்தனை பரவசமாயிட்டே... அவ எவனோ ஒருத்தனைக் கூட்டிட்டு நம்மைப் பத்தி நினைப்பே இல்லாம இருக்கா."

"அவ நம்ம நினைப்பில்லாம இருக்கமாட்டாங்க. கோபம் தணிஞ்சதும் நேரில் வர்றதா கடிதம் எழுதி இருக்காளே!"

"அவ வரமாட்டா? அப்படியே வந்தாலும் நான் அவளை வீட்டுக்குள் காலை வைக்க விடமாட்டேன்" —கோபத்துடன் ராமநாதன் குரலை உயர்த்த—

சாவித்திரி அவரை அமர்த்தினாள்.

"சரி, சரி. கத்தாதீங்க. இதே கோபத்தோடு போய் அந்தத் தம்பிகிட்டே பேசாதீங்க. பொறுமையா என்ன ஏதுன்னு விவரம் கேளுங்க."

ராமநாதன் முன்னறைக்குப் போனார்.

அவன் இருக்கையைவிட்டு எழுந்து வணக்கம் சொன்னான்.

ராமநாதன் அவனுக்கு எதிரே உட்கார்ந்துகொண்டே—

"யாருன்னு தெரியலையே?" என்றார்.

சாவித்திரி கதவோரம் வந்து நின்றாள்.

அவன் சற்று மென்மையான குரலில் சொன்னான்:

"என் பேர் சுனில்குமார். என்ஜினியரா இருக்கேன். வெளியூர் போயிருந்த நான் நேத்திக்குத்தான் திரும்பி வந்தேன். திரும்பி வந்ததும் வனிதாவைப் பத்தின சில விவரங்களைக் கேட்டு அதிர்ச்சி ஆயிட்டேன்."

ராமநாதன் காரமான குரலில் சொன்னார்:

"பெத்த அம்மா, அப்பாவைக்கூட மதிக்காம வேற ஒருத்தனைக் கல்யாணம் பண்ணிட்டு ஓடுறது அவளோட விருப்பமா இருந்தா அதுக்காக நாம என்ன செய்ய முடியும்?"

"எனக்கு இந்தக் கல்யாண விஷயம்தான் ரொம்ப உறுத்தலா இருக்கு சார். வனிதாவை நம்ப முடியலை. அவ நிச்சயமா இந்த மாதிரி ஒரு கல்யாணத்துக்கு சம்மதிச்சிருக்கவே மாட்டா."

"வனிதாவைப் பத்தி எங்களைவிடவும் ரொம்ப தெரிஞ்சவன் மாதிரி பேசுறியே... வனிதா இப்படி ஒரு கல்யாணத்துக்கு சம்மதிச்சிருக்க மாட்டான்னு எப்படி அவ்வளவு உறுதியா சொல்றே?"

சுனில்குமார் பட்டென்று சொன்னான்:

"வனிதாவும், நானும் ஒருத்தரையொருத்தர் உயிருக்குயிரா விரும்பிட்டிருந்தோம் சார்."



# 9

ரீட்டா பாயத் தொடங்கிய அதே விநாடி—

மூலையின் செலகள் துரிதமாய் அலாரமடித்து— அவர்களில் ஒருத்தனை மிக வேகமாக ரீட்டாவின் பின்னாலேயே பாய வைத்தது.

ரீட்டா ஜன்னலுக்கு அப்பால் பாய்கிற கடைசி விநாடியில், அவனுடைய காலைப் பற்றிக்கொண்டுவிட்டான்.

ஜன்னலுக்கு அந்தப்புறம் இருந்த 'எக்ஸ்டென்ஷன்' சுவரில் மல்லாந்து விழுந்தாள், ரீட்டா.

இன்னொருத்தனும் உதவிக்கு ஓடிவர, அடுத்த இரண்டு விநாடிகளுக்குள் ரீட்டாவை அறைக்குள் இழுத்துப் போட்டார்கள்.

ஆத்திரத்தில் ஒருத்தன் அவள் வயிற்றின் மேல் சத்தென்று உதைத்தான்.

"தப்பிச்சா போகப்போறே?"

இத்தனை நேரம் அமைதியாய்க் கேட்டுக்கொண்டிருந்தவர்கள், தங்கள் சுயரூபத்தைக் காட்ட தொடங்கினர்.

ஒருவன் தன் கையில் இருந்த நைலான் கயிறை அவள் கழுத்தில் நெக்லஸ் மாதிரிப் போட்டான். அதை எதிரெதிர் திசைகளில் கொஞ்சமாய் இறுக்கிக்கொண்டே கேட்டான்.

"விஜய்தர்மா எங்கிருக்கான்னு உனக்குத் தெரியுமோ, தெரியாதோன்னு லேசா எங்களுக்குச் சந்தேகம் இருந்தது. ஆனா, இப்போ நீ தப்பிச்சுப் போக முயற்சி பண்ணினதைப் பார்த்ததில் சந்தேகம் தெளிஞ்சிருச்சு. நிச்சயமா உனக்கு அவனைப் பத்தித் தெரியும்."

மற்றொருவன் அவள் மோவாயை நிமிர்த்திச் சொன்னான்:

"உன்னைக் கொல்லாம விடமாட்டோம்! பூமாலையா

போட்டுட்டிருக்கே? இன்னும் கொஞ்சம் இறுக்குடா."
அவன் இறுக்கினான்.

மூச்சுக்குழாய் இறுகத் தொடங்க–

அவதியுடன் மூச்சுவிட்டாள், ரீட்டா.

விழிகள் பிதுங்கின.

"ப்ளீஸ்..."

பேசமுடியாமல் திணறினாள்.

கேட்டுக்கொண்டே இன்னும் கொஞ்சம் இறுக்கினான்.

அதே விநாடி–

'ங்.. ங்.. ங்..'

'இண்டர்காம்' ஒலித்தது.

ரிசீவரை எடுத்தான். மறுமுனைக் குரலை செவிமடுத்தான்.

முகம் படிப்படியாய் கறுப்படையத் தொடங்கியது.

சாவித்திரியும், ராமநாதனும் திடுக்கிட்ட முகங்களோடு அந்த சுனில்குமாரைப் பார்த்தார்கள்.

"என்ன சொல்றே நீ?"

"உண்மையைத்தான் சொல்றேன் சார். வனிதா என்னை உயிருக்கு உயிரா காதலிச்சா. இப்படிச் சொன்னவுடன் எங்க ரெண்டு பேரையும் பத்தி ஒரு மட்டமான முடிவுக்கு வந்துடாதீங்க. எங்க காதல் பூங்கா, ஓட்டல்ன்னு சுத்தற ரகம் இல்லை. நாங்க முதன்முதலா பார்த்துகிட்டது– பழக ஆரம்பிச்சது... அடிக்கடி சந்திச்சது எல்லாமே நூலகத்தில்தான்.

இரண்டு பேரோட மனசும், சிந்தனையும் ஒரே திசையில் இருந்ததால் மணிக்கணக்கா பேசுவோம். வனிதாவோட படிப்பு முடிஞ்சதும், வீட்டில் சொல்லி பெரியவங்க சம்மதத்தோடு எங்கக் கல்யாணம் நடக்கணும்னுதான் முடிவுபண்ணி இருந்தோம். அப்படியிருக்க வனிதா வேறு ஒருத்தனை கல்யாணம் பண்ணிக்கிறதுக்காக வீட்டைவிட்டு



ஓடினான்னா இதுல ஏதோ விஷயம் இருக்கு."

"வனிதா வேறு ஒருத்தனை விரும்பிக் கல்யாணம் பண்ணிகிட்டதுக்கு ஆதாரம் இருக்கு! அவளே கைப்பட கடிதம் எழுதி இருக்கா. கல்யாண படத்தையும் அனுப்பி இருக்கா."

சுனில்குமார் தன் கையிலிருந்த பையை கவிழ்த்தான்.

அதிலிருந்து கத்தை கத்தையாய்க் காகிதங்கள் கொட்டின.

ராணி முத்து சந்தா விவரம்
இரண்டு ஆண்டு ரூ. 275
ஒரு ஆண்டு ரூ. 150
ஆறு மாதம் ரூ. 80
வெளிநாடுகள்
ஒரு ஆண்டு ரூ. 825
ஆறு மாதம் ரூ. 475
பணம் அனுப்பவேண்டிய முகவரி:
மேலாளர்,
"ராணி முத்து",
சென்னை–600 007.

"இதைப் பார்த்தீங்களா? அத்தனையும் வனிதா எனக்கு எழுதின கடிதங்கள். இவ்வளவு கடிதங்கள் எழுதினவ.. போன வாரம் நான் ஊருக்குப் போறப்ப, 'சீக்கிரம் வந்துடுங்க'ன்னு சொல்லி அனுப்பினவ... இடைப்பட்ட ஆறேழு நாட்கள்ல இன்னொருத்தனை விரும்பி ஓடிப்போய் கல்யாணம் பண்ணிக்கிட்டாங்கிறதை உங்களால் நம்பமுடியுதா?"

"அப்ப அந்த கடிதம்... படம்?"

"அதை நான் பார்க்கலாமா?"

ராமநாதன், சாவித்திரியிடம் திரும்பினார்.

"அதை எடுத்துட்டு வா சாவித்திரி."

சாவித்திரி வீட்டுக்குள் போனாள்.

ராமநாதன் மீண்டும் சுனில்குமாரிடம் திரும்பிக்கேட்டார்.

"வனிதாவைப் பத்தின இந்த விவரமெல்லாம் உனக்கு எப்படித் தெரிஞ்சது?"

"வனிதா தேதிக்கும், இன்னிக்கும் நூலகத்துக்கு வரலை. அதனால கல்லூரிக்குப் போனேன். வனிதாவோட தோழி மாலினி மூலமாத்தான் இந்த விவரங்களையெல்லாம் தெரிஞ்சுகிட்டேன்." சாவித்திரி அறைக்குள்ளிருந்து வெளிப்பட்டாள்.

படத்தின் மேல் பார்வையைத் தவழவிட்டவன் முகப்பரப்பில் துல்லியமான திகைப்பைக் காட்டினான். 'வனிதாவா... இப்படி சிரிப்போடு ஒருத்தனுக்கு கழுத்தை நீட்டிக்கொண்டிருக்கிறாள்?' துக்கம் நெஞ்சைத் தாக்க தலைகவிழ்ந்தான், கனில்.

"அவ கைப்பட எழுதின இந்த கடிதத்தையும் பாருப்பா!"

அந்தக் கடிதத்தையும் அவனிடம் நீட்டினார், ராமநாதன்.

நிமிர்ந்த கனில்குமார்; கடிதத்தின் மேல் பார்வையை மேயவிட்டான். அவனுக்கு வெகுவாய் பரிச்சயமான வனிதாவின் கையெழுத்து நெடுக ஓடியிருந்தது.

கடிதத்தில் ஆழ்ந்திருந்தவனின் முகம் அடுத்த சில விநாடிகளில் பரபரப்பில் விழுந்தது. பதட்டமாய் நிமிர்ந்து ராமநாதனையும் சாவித்திரியையும் ஏறிட்டான்.

"சார்... வனிதா ஆபத்தில் இருக்கா... அவளை உடனே காப்பாத்தியாகணும்..."

## 10

இண்டர்காமில் பேசியவனின் முகம் இருட்டுக்குள் விழுந்ததைக் கண்டு- மற்றவன், ரீட்டாவின் கழுத்தில் கொடுக்கிற இறுக்கத்தை தளர்த்தினான்.

"போனல யாரு?"

ரிசீவரை பொத்தியபடி- "கீழே வரவேற்பில் இருந்து பேசறாங்க" என்றான்.



"என்னவாம்?"

"எதிர்மாடியில உட்கார்ந்து ஏசியை சரிபண்ணிகிட்டு இருந்த ஆள், ரீட்டா போட்ட சத்தத்தைக் கேட்டு கீழே தகவல் கொடுத்திருக்கான் போலிருக்கு."

"ரீட்டா விழுந்ததையும், அவளைப் பிடிச்சு நாம உள்ளே இழுத்துப்போட்டதையும் பார்த்திருப்பானா?"

"உங்க அறையில என்ன பிரச்சினைன்னு வரவேற்பில பொதுவாகத்தான் கேக்கிறாங்க."

"ரிசீவரை இப்படி கொடு. நான் பதில் சொல்லிக்கிறேன்" சொன்னவன் அவனிடமிருந்து ரிசீவரை வாங்கி, சிரிப்போடு பேசினான்.

"அலோ... அறையில் ஒரு பிரச்சினையும் இல்லை... எங்க அறைக்கு இந்த ராத்திரி பொழுதைக் கழிக்க வந்த பெண் கொஞ்சம் அதிகமா குடிச்சுட்டா... அவ பண்ணுற சந்தோஷமான ஆர்ப்பாட்டம்தான் அது."

"சாரி சார்..."

"ஓ.கே." லொட்டென்று ரிசீவரை சாத்திவிட்டு- ரீட்டாவைப் பார்த்துப் புன்னகைத்தான்.

"பொருத்தமா இப்படி ஒரு பதிலை சொல்லிட்டா... விஷயத்தை அதோடு விட்டுடுவாங்க."

ரீட்டா கையெடுத்துக் கும்பிட்டாள்.

"தயவுசெய்து என்னை விட்டுடுங்க."

"மாட்டோம்னா சொல்றோம்? நீ விஜயதர்மாவைப் பத்தி சரியான தகவலைக் கொடுத்துட்டு போய்கிட்டே இருக்கலாம்."

"எனக்கு உண்மையா தெரியாது."

"நண்பா... இவ வழிக்கு வரமாட்டா... இன்னும் கொஞ்சம் கடுமையா சிகிச்சையைக் காட்டலாம்... இன்னும் பத்து நிமிடத்துல இவ வாயிலிருந்து விவரம் வந்தே ஆகணும்

மொதல்ல இவகிட்ட கொஞ்சம் ரத்தத்தை வரவழைச்சு பார்க்கலாம். அம்மணிக்குத் தலையோட ரத்தத்தை பார்த்தாத்தான் கொஞ்சம் பயம் வரும்."

சொல்லிக்கொண்டே தோல் பையிலிருந்து அந்தக் கருவியை வெளியில எடுத்தார்கள். ரீட்டாவை ஒரு நாற்காலியில் கட்டிப்போட்டு- கருவியின் வளையத்தை அவள் தலையில் கிரீடம் மாதிரி மாட்டினார்கள். வளையத்திலிருந்து சுத்தியல் மாதிரி ஒன்று நீண்டு நேராய் அவள் முகத்தின் மையத்தில் நின்றது. கருவியின் வயரை 'பிளக்பாயிண்ட்'டில் சொருகினான் ஒருவன்.

"இது என்னான்னு பார்க்கிறியா, ரீட்டா? இதுக்கு பேர்தான் 'பிளட் ஹேமர்'. தமிழ்ல சொன்னா 'ரத்தச் சுத்தியல்' சுவிட்சைத் தட்டினா போதும். இந்த சுத்தியல், மூக்குத்தண்டை அடிக்கும். வலியில் உயிர் போகும். ரெண்டு நாசி துவாரங்களிலும் ரத்தம் கொட்டும். இந்தக் கருவியோட 'நாப்'பை நகர்த்தி அடியோட வேகத்தை அதிகப்படுத்தலாம்... குறைக்கலாம்."

"இந்த அடி தேவையா ரீட்டா?"

"வே- வேண்டாம்..."

"அப்ப உண்மையைச் சொல்லு."

"எனக்கு விஜய்தர்மாவைப் பத்தி எதுவும் தெரியாது."

"நண்பா! இவ வழிக்கு வரமாட்டா... சுவிட்சைத் தட்டு."

'சுவிட்ச்'சைத் தட்டப்போனவன் சட்டென்று நின்றான்.

அறைக் கதவை யாரோ தட்டினார்கள்.

**அ**னில்குமாரை குழப்பத்தோடு பார்த்தார்கள் ராமநாதனும், சாவித்திரியும்.

"என்னப்பா சொல்றே... அனிதா ஆபத்தில் இருக்காளா?"

"ஆமா சார்! இந்தக் கடிதத்தை வனிதா இஷ்டப்பட்டு எழுதலை... கட்டாயப்படுத்தி யாரோ எழுத வைச்சிருக்காங்க. அந்த கல்யாண படத்துக்குகூட அவளை மிரட்டித்தான் நி-



-வைச்சிருப்பாங்கன்னு நினைக்கிறேன்."

"எதை வைச்சு அப்படிச் சொல்றே?"

"தான் ஆபத்தில் மாட்டி இருக்கிறதை வனிதாவே இந்த கடிதத்தில் சூசகமா தெரியப்படுத்தி இருக்கா."

"எப்படி?"

அவர்கள் ஒன்றும் புரியாமல் அவனைப் பார்க்க- வனிதா எனக்கு எழுதின கடிதம் ஒன்றை அவர்கள் எதிரில் போட்டான், அனில்குமார்.

"இந்தக் கடிதத்தை படிச்சுப் பாருங்க... போன மாசம் வனிதா எனக்கு எழுதின கடிதம். இதை வாய்விட்டே படியுங்க."

ராமநாதன் அந்தக் கடிதத்தைப் படித்தார்:

"அன்புள்ளவர்க்கு,

**வனிதா எழுதுவது. உங்கள் நண்பர் அய்யப்பன் மூலமாக நீங்கள் கொடுத்து அனுப்பிய 'இர்வின் வாலஸ்' புத்தகம் கிடைத்தது. புத்தகத்தை ரொம்ப நாள் பயன்படுத்தாமல் வைத்திருப்பீர்கள் போலிருக்கிறது. தூசியை துடைத்துவிட்டாவது தரக்கூடாதா?**

**பிரியமுடன்,**

**வனிதா."**

ராமநாதன் படித்து முடித்துவிட்டு நிமிர்ந்தார்.

"ஒண்ணும் புரியலையே?"

"இந்தக் கடிதத்தை யார் படிச்சாலும் சரி... ஒரு காதலி காதலனுக்கு எழுதின மாதிரி தெரியாது. வனிதா இந்த கடிதத்துல ஒரு சின்ன சில்மிஷம் பண்ணி இருக்கா. எப்பவுமே அப்படித் தான் எனக்கு கடிதம் எழுதுவா. இந்த கடிதத்துல அவ பண்ணி இருக்கிற சில்மிஷம் எனக்குத்தான் தெரியும். கடிதத்தை நல்லா பாருங்க... நிறைய அடித்தல் திருத்தல் இருக்கா."

ராமநாதன் பார்த்துவிட்டு தலையாட்டினார்.

"ஆமா."

"இப்ப அந்த அடித்தல் திருத்தல்களை கூர்ந்து கவனிச்சு படியுங்க."

பார்த்தார்.

"அன்புள்ள சுனில் வர்க்கு,

வனிதா எழுதுவது. உங்கள் நண்பர்ஜ அய்யப்பன் மூலமாக நீங்கள் கொடுத்து அனுப்பிலன இர்வ்வின் வாலஸ் புத்தகம் கிடைத்தது. புத்தகத்தை ரொம்ப நாள்யு யூஸ் பண்ணாமல் வைத்திருப்பீர்கள் போலிருக்கிறது. தூசியைத் துடைத்துவிட்டாவது தரக்கூடாதா?

பிரியமுடன்

வனிதா."

ராமநாதனிடம் சுனில் சொன்னான்: "அடிக்கோடுக்கு உள்ளாகி இருக்கும் எழுத்துகளை வரிசையா கோர்த்துப் பாருங்க."

கோர்த்துப் பார்த்தார்.

"சுனில் ஐ லவ் யு..."

சுனில்குமார் தொடர்ந்தான்."அவளோட ஒவ்வொரு கடிதத்திலும் இந்த மாதிரி சின்னச் சின்ன குறும்பான வாக்கியங்களை அடிக்கோடுடன் எழுதி இருப்பா. காணாமபோன பின்னாடி வனிதாகிட்ட இருந்து வந்திருக்கிற இந்தக் கடிதத்தை இப்பப் பாருங்க... அவ தந்திருக்கிற 'க்ளு' தெரியும்."

வனிதாவிடமிருந்து படத்துடன் வந்திருந்த அந்த கடிதத்தை இப்போது அடித்தல் திருத்தல்களோடு சேர்த்துப் படித்தார், ராமநாதன்.

அன்புள்ள ஆ அம்மா- அப்பா அபவர்களுக்கு,

வணக்கத்துடன் வனிதா எதிழுதிக்கொல்ள்வது. இப்பவும் நான் இங்கே நான் நலமாக இருக்கிறேன். உள்ளேன். இந்த இரண்டு நாட்களில் நீங்கள் என்னை நினைத்து மிகவும் கவலைப்பட்டிருப்பீர்கள் என்பதை நான் அறிவேன். சூழ்நிலை தங்களைவிட்டு பி...பிரியும்படி என்னைத் தூண்டிவிட்டது.





"கதை எழுதறதுக்கு முன்னாடி ஏன் நடந்து பழகறீங்க?"

"கதையின் நடை நல்லா இருக்கணுமே!"

—எல்.ஜெ. கலைவாணி, குரோம்பேட்டை



"எங்க அத்தை 'பெரிய பெண்ணைக் கட்டிக்கிறீயா? சின்ன பெண்ணைக் கட்டிக்கிறீயா?'ன்னு கேட்டாங்க!"

"நீ என்ன சொன்னே?"

"ஒவ்வொண்ணாக் கட்டிக்கிறேன்னேன்!"

—எம். சிவகுருநாதன், தஞ்சை.



"உன்னை டாக்டருக்கு படிக்க வைக்கணும்னு ஆசைப்பட்டேன், அது முடியாது போலிருக்கே!"

"ஏம்பா?"

"கையெழுத்துப் போட்டியில் முதல் பரிசு வாங்கி இருக்கியே?"

—ச.க. பழநிச்சாமி, அருப்புக்கோட்டை

# இதயம் பேசுகிறது

நாவலைப் படித்து உங்கள் கருத்துகளை எழுதி அனுப்புங்கள்.
முகவரி: **இதயம்பேசுகிறது, "ராணிமுத்து", சென்னை-600 007.**

## விறுவிறுப்பான நாவல்

பெண்ணுக்கு பெண்ணே எதிரியாக இருக்கும் மையக்கருவை வைத்து வித்தியாசமான நாவலை விறுவிறுப்பாகப் படைத்திருந்தார், தேவிபாலா, யமுனா பாத்திரம், 'படையப்பா' நீலாம்பரி போல் மனதில் நிற்கும்!

*த. சத்தியநாராயணன்,*
*அயன்புரம்.*

அன்பால் எதையும் சாதிக்க முடியும் என்பதை அழகாக மனதில் பதிய வைத்தது 'தேவை ஒரு தேவதை.'

*ஏர்பூர் இ. கார்த்திக்.*

அப்பாவிப் பெண்ணான கல்யாணி, யமுனாவின் திமிரை அடக்கி- விக்ரமை கைப்பிடித்த விதம் சூப்பரோ சூப்பர்! கதையோட்டம் சிலிர்க்க வைத்தது.

*தி. சிவக்குமார், எலுகாம்வலசை.*

குடும்பங்களில் நடக்கும் பிரச்சினையைத் தத்ரூபமாக எடுத்துக்காட்டியது. "நண்பனின் நண்பன்", "பண்பு" சிறுகதைகள் சூப்பர்.

*வீ. பிச்சைமுத்து,*
*செல்லப்பெருமாள்கோவில்.*

விறுவிறுப்புடன் மறுபடியும் படிக்க தூண்டியது.

*கா. அப்துல்ரகுமான்,*
*குட்டுப்பட்டி.*

கல்யாணியின் பணிவு, தன்னடக்கம், யமுனாவின் அகந்தை எல்லாவற்றையும் உணர்வுபூர்வமாகச் சொல்லி இருக்கும் தேவிபாலா பாராட்டுதற்கு உரியவர். இது, படிப்பினையூட்டும் குடும்ப நாவல்.

*பிரபாலிங்கேஷ்,*
*மேலகிருஷ்ணன்புதூர்.*

சுவாரசிய நாவல், அசத்தலான குட்டிக்கதைகள், சிரிப்பு, கவிதை, துணுக்குகள் என பளிச்சிடுகிறது, "ராணிமுத்து."

*சு.மு. சுரேஷ்,*
*அரைக்கால்கரை.*

துணுக்குகள் ஒவ்வொன்றும் வைரமாய் மின்னுகின்றன... பாராட்டுகள்!

*குலசை க.மீ. நஜ்முத்தீன்.*



---

நான் எடுத்த ஒரு முடிவைப் பஸ்ற்றி தங்களிடம் தெரிவிக்க பயப்பட்டேன்.

ஆகவேதான் சொல்லாமல் கூட வீட்டைவிட்டு வெளியேறி விட்டேன். ஆமாம், நான் ரமேஷ் என்பவரை ஒரு ஆண்டாக காதலிக்கிறேன். ரொம்ப நல்லவர். அவர் கல்யாணத்திற்கு அவசரப்பட்டார். உங்களிடம் இதைப்பற்றி சொல்ல எனக்கு பயம். அவர் வீட்டிலும் திருமணத்திற்கு எதிர்ப்பு இருந்தது.

ஆகவே, நேற்று முன்தினம் இருவரும் ஒரு கோவிலில் வைத்து- உங்களை மனப்பூர்வமாக வணங்கி திருமணம் செய்துகொண்டோம். கல்யாண படம் இணைத்துள்ளேன். ரமேஷ் என்னை இங்கே நல்லவிதமாய் பார்த்துக்கொள்கிறார். நீங்கள் இருவரும் என் மேல் மிகவும் கோபமாய் இருப்பீர்கள். உங்கள் கோபம் து தணிந்தபின் ஒருநாள் நாங்கள் இருவரும் நேரில் வருகிறோம்.

என்றும் தங்கள் ஆசீர்வாதங்களை நாடும்-

வனிதா."

ராமநாதன் அந்த கடிதத்தில் அடிக்கோடு போட்டு இருக்கும் வார்த்தைகளையும், எழுத்துகளையும் வரிசை கோர்த்துப் பார்த்தார். மனதை மெலிதாய் ஒரு அதிர்ச்சி கவ்வியது.

"ஆ...ப...த்...தி...ல் நான் இருக்கிறேன். பி...ஸ்...ட...ல் வா...ழ்...த்...து."

## 11

கதவு தொடர்ந்து தட்டப்பட்டுக்கொண்டிருந்தது. "டொக்... டொக்..."

"யார் இந்த நேரத்துல?"

"கொஞ்சமா கதவைத் திறந்து பார்க்கட்டுமா?"

"வெளியே இருக்கிறவன் யாருன்னு தெரியாம கதவைத் திறந்து

பார்க்கிறது தப்பு."

"என்ன செய்யலாம்?"

"மொதல்ல இவ கட்டை அவிழ்த்துவிடு. அந்தக் கருவியை எடுத்து தோல்பையில் போட்டு வை."

"டோக்..."

கதவு தொடர்ந்து தட்டப்பட்டுக்கொண்டிருக்க- ரீட்டாவை அவசரமாய் விட்டுவிட்டு பின்பக்கமாய் அவளுடைய கைகளை வளைத்துக் கட்டி- வாயில் பிளாஸ் குறி பிளாஸ்திரியை ஒட்டி- குளியலறைக்கு கூட்டிப்போய்- ஷவரை திறந்துவிட்டு- கதவைப் பூட்டிக்கொண்டார்கள்.

"இப்ப போய் யாருன்னு பாரு."

ஒருவன் கதவை நோக்கிப் போனான்.

இன்ஸ்பெக்டர் சந்தானமும், சப்-இன்ஸ்பெக்டர் கார்த்திகேயனும் சுனில்குமார் சொன்னதைக் கேட்டு திகைத்துப் போயிருந்தார்கள். ஏற்கெனவே, கேஸ் சுவரில் இடித்துக்கொண்ட மாதிரி பாதியில செயலற்று நின்றிருந்தபோது- ராமநாதன், ஸ்டேஷனுக்கு வந்து- வனிதா காணாமல் போகவில்லை. அவளாகவே ஓடிப்போயிருக்கிறாள் என்று சொன்னபோது- "அப்பாடா" என்று நெஞ்சை நீவி பெருமூச்சுவிட்டு, வழக்கு கோப்பினை மூடச் செய்திருந்தார்கள்.

இப்போது சுனில்குமார்- அந்த கடிதத்தை வைத்துக்கொண்டு 'வனிதா ஆபத்தில் இருக்கிறாள்' என்று சொன்னபோது அதிர்ச்சியோடு நிமிர்ந்து உட்கார்ந்தார்கள்.

சந்தானம் கேட்டார்:

"அதென்ன பிஸ்டல் வாழ்த்து என்கிற வார்த்தை?"

சுனில்குமார் சொன்னான்: "அது எனக்கும், வனிதாவுக்கும் மட்டுமே தெரிந்த ரகசிய வார்த்தை சார். வனிதா 'க்ரைம்' கதைகளை விரும்பிப் படிக்கிறவ- நூலகத்தில் நாங்கள் சந்திச்சுப் பேசிக்கும்போது- யாராவது கவனிக்கிற மாதிரி தெரிஞ்சா



'தொடர்ந்து பேசாதீங்க.. சூழ்நிலை சரியில்லை'ன்னு சூசகமா தெரிவிக்கிறதுக்காக- 'பிஸ்டல் வாழ்த்து' என்கிற வார்த்தையை வனிதா சொல்லுவா.

பொதுவா எதிரிகளை குறிப்பிடறதுக்காக நாங்க ரெண்டு பேரும் பரிமாறிக்கிற வார்த்தை அது- அப்பா, அம்மாவுக்கு எழுதின இந்தக் கடிதத்தை, நான் எப்படியாவது பார்ப்பேன்கிற நம்பிக்கையில் அந்த 'பிஸ்டல் வாழ்த்து' என்கிற வார்த்தையை வனிதா உபயோகப்படுத்தி இருக்கா."

சந்தானம் வனிதாவின் கடிதத்தை திரும்பத் திரும்ப ஏழெட்டு தடவை படித்துப் பார்த்துவிட்டு- முன் மண்டையை சொறிந்துகொண்டார்.

"தகவல், மொட்டையாக இருக்கு. 'ஆபத்தில் தான் இருக்கிறேன். பிஸ்டல் வாழ்த்து' -இந்த வாசகங்களை மாத்திரம் வைச்சுகிட்டு இந்த வழக்கை எப்படி விசாரணை பண்ணுறது?"

## 12

அவன் மெதுவாய் போய்- கதவை நெருங்கி- தாழ்ப்பாளை விலக்கி திறந்தான். வெளியே அறைப் பையன் நின்றிருந்தான்.

"சார்... நீங்க கேட்ட 'ஸ்காட்ச்' கிடைக்கலை. வேறு ஒரு ஓட்டலுக்குப் போய் வாங்கிட்டு வர்றேன், அதான் தாமதம்."

இருவரும் எரிச்சலாய் அவனைப் பார்த்தார்கள்.

"மேசையில் வைச்சுட்டுப் போ."

அறைப் பையன் சாவதானமாய் உள்ளே போய்- மேசையின் மேல் 'ஸ்காட்ச்'சை வைத்தவன்- குளியலறை பக்கமாய் பார்வையை அனுப்பிவிட்டு கேட்டான்.

"என்ன சார்- ஷவரை திறந்துவிட்டுட்டீங்க போலிருக்கே?"

"உள்ளே குளிக்கிறாங்க! கேட்டதைக் கொண்டுவந்து

வைச்சுட்டியே.. உன் வேலையைப் பார்த்துவிட்டு போ."

"சாரி சார்.."

வேசாய் முகம் சுருங்கி அவன் வெளியே போனதும் அவசர அவசரமாய் கதவைச் சாத்தினார்கள்.

"நண்பா! அந்த ரீட்டா நம்ம நேரத்தை வீண்பண்ணிட்டு இருக்கா! இன்னும் அருக்க நிமிடத்துல அவ வாயிலிருந்து உண்மையை வரவழைக்கணும்."

குளியலறையைத் திறந்து— ரீட்டாவை வெளியே இழுத்து வந்தார்கள். 'பிளாஸ்டரை' பிரித்தார்கள்.

அவள் திமிற—

ஒருவன் அறைந்தான்.

"வாயைத் திற.. அந்த விஜய்தர்மா எங்கே?"

"தெரியாது.."

"உன்னைத் துண்டுப் போட்டுடுவோம்... மரியாதையா சொல்லு! அந்த அயோக்கிய விஜய்தர்மாவுக்காக நீ சாகாதே."

"நிஜமா அவனை எனக்குத் தெரியாது."

ஒருவன் அவளுடைய கூந்தலைப் பற்றிப் பிடித்து உலுக்கினான்.

"சொல்லுடி.."

"—"

இன்னொருவன் எட்டி உதைத்தான்.

"அம்மா.."

மடங்கி உட்கார்ந்தாள், ரீட்டா.

மூக்கு துவாரங்களிலும்— வாயிலும் ரத்தம் கொப்பளித்து தள்ளியது.

அந்த அறைக்குள் கை கால்கள் கட்டப்பட்டு— வாயில் துணி அடைக்கப்பட்டு ஒருக்களித்து விழுந்திருந்தாள், வனிதா.



அணிந்திருந்த சல்வார் கமீசில் தூசியும், அழுக்கும் நிறைய தெரிந்தன. மனம் பயமாய் திரும்பத் திரும்ப யோசித்தது.

'இங்கிருந்து தப்பிக்க முடியுமா?'

'கடந்த நான்கு நாட்களாய்— நல்ல சாப்பாடு தருகிறார்கள். இரண்டு தடியர்களில் எவனும் என் உடம்பை ஒரு தடவையாவது கெட்டப் பார்வை பார்க்கவில்லை!'

'எதற்காக என்னை இங்கே கொண்டுவந்து வைத்திருக்கிறார்கள்?'

யோசித்துக்கொண்டிருக்கும்போதே பக்கத்து அறையில்—

நடைச் சத்தமும்— பேச்சு சத்தமும் மாறி மாறி கேட்டன.

"சேது! இன்னும் எத்தனை நாளுக்குத்தான் இவளை காவல் காத்திட்டு இருக்கிறது? தொழிலை வெளியே போய் கவனிக்க வேண்டாமா?"

"கொஞ்சம் பொறு."

"எனக்கு பொறுமையில்லை."

"அவசரப்படாதே யூசுப்.. ரெண்டு நாள் போனாலும் பரவாயில்லை. சாமர்த்தியமா செயல்படணும்."

"உன்னோட திட்டம்தான் என்ன? அதையாவது கொஞ்சம் விளக்கமா சொல்லு. இவளைக் கடத்திக்கிட்டு வந்த ரெண்டாவது நாள்... அவளை வீட்டைவிட்டு ஓடிப்போய் கல்யாணம் பண்ணிகிட்ட மாதிரி ஒரு கடிதம் எழுத வைச்சே. நம்ம நண்பன் ஒருத்தனை மாப்பிள்ளை மாதிரி நிக்க வைச்சு, படம் எடுத்து— கடிதம்கூட அனுப்பி வைச்சே!

காரணம் கேட்டதுக்கு, மகளைக் காணோம்னு தேடுறதை விட்டுட்டு வனிதாவோட அம்மாவும் அப்பாவும் தன் பொண்ணு, அவனோட மனசுக்குப் பிடிச்ச ஒருத்தனோடு சந்தோஷமாய் வாழ்ந்திருட்டிருப்பாங்கிற நம்பிக்கையில் வீட்டுல நிம்மதியா இருப்பாங்கன்னு சொன்னே."

"ஆமா."

"சரி.. இனிமே உன்னோட திட்டம் என்ன?"

"இனிமே இவளைத் தீர்த்துக்கட்டப் போறோம்.. அப்படித் தீர்த்துக்கட்டினா, போலீஸ் கையில பிணம் மாட்டினாலும், கொலைப் பழி யார் மேல விழும் தெரியுமா?"

"யார் மேல?"

"மாறுவேடம் போட்டு கல்யாண கோலத்துல வனிதாவுக்கு பக்கத்துல நின்னு தாலி கட்டினானே... நம்ம நண்பன் அவன் மேல விழும்."

"இல்லாத ஆளை தேடிகிட்டு போலீஸ் அலையும். நாம நிம்மதியா வெளியில போய் தொழில் பார்க்கலாம். சரி.. வனிதாவை எப்படி முடிக்கிறது?"

வனிதாவின் காதுகளில்– அவர்கள் பேசிக்கொண்டது விழ– இதயம் உள்ளுக்குள் சில்லிட்டுப்போனது.

'கடவுளே! இவர்களிடமிருந்து தப்பிக்க முடியுமா?'

வனிதாவின் நம்பிக்கை சிறிது சிறிதாய் சிதையத் தொடங்கியது. அறைக் கதவு திறந்துகொள்ள– அவர்கள் இருவரும் உள்ளே நுழைந்தார்கள்.

## 13

**வா**யிலும், மூக்கிலும் ரத்தத்தைக் கொட்டிக்கொண்டு மல்லாந்து விழுந்த ரீட்டாவை தூக்கி சுவரோடு சேர்த்து நிறுத்தினார்கள், இருவரும்.


"வீணாக ரத்தம் கொட்டி சாகாதே! உண்மையைச் சொல்லு.. கைநிறைய பணம் தர்றோம். விஜய்சர்மா எங்கே?"

"எ.. எனக்க.. தெரியாது.."

ரீட்டாவின் கழுத்தை 'கப்'வென்று பிடித்தான், ஒருவன்.

"இதோ பார்! உன் காதலனை நீ இப்போ காட்டிக்கொடுக்காமே





இருக்கலாம். ஆனா, அவனை நாங்க எப்படியும் ரெண்டு நாள்ல கண்டுபிடிச்சு துண்டு துண்டா வெட்டப்போறோம். நாங்க பண்ணுற நிழல் தொழிலுக்கு விஜய்தர்மா கொடுத்துட்டு வர்ற இடைஞ்சல்களுக்கு கூடிய சீக்கிரமே முடிவுகட்டப் போறோம்... அதனால அவனைவிட்டு விலகிடு. நம்ம குழுவில் சேர்ந்துடு. தினசரி பணம் பார்க்கலாம்."

"வி... விஜய்தர்மாவைப் பத்தி... நிஜமாவே... எ...எனக்கு ஒண்ணும் தெரியாது–"

முழங்காலை மடித்து– ரீட்டாவின் அடி வயிற்றில் ஒரு எத்து எத்தினான், ஒருவன். ரீட்டா எங்கோ போக– கண்கள் செருகி, கடைவாயோரம் கனிசமான ரத்தத்தைக் காட்டி– சரிந்து விழுந்தான்.

"என்ன நண்பா?"

"மயக்கமாயிட்டா... அந்த 'ஜக்'கை கொண்டுவந்து, தண்ணியைக் கொட்டு."

மற்றவன் குனிந்து– ரீட்டாவின் கன்னத்தைத் தட்டி நாசியருகே கை வைத்துப் பார்த்தான்.

முகம் மாறினான்.

"என்ன?"

"செத்துட்டா."

இன்ஸ்பெக்டர் சந்தானமும், சப்-இன்ஸ்பெக்டர் கார்த்திகேயனும் 'பைக்'கில் பயணப்பட்டு, ராமநாதனின் வீட்டை நோக்கி போய்க்கொண்டிருந்தார்கள்.

"கார்த்திகேயன்..."

"சார்..."

"இந்த வனிதா வழக்கில் உங்களுக்கு ஏதாவது பிடிபடுதா?"

"ஒரு பெண் கடத்தப்படணும்ன்னா ரெண்டு காரணம்தான் இருக்க முடியும் சார். ஒண்ணு அவ உடம்பு மேல ஆசைப்பட்டு



கடத்தப்பட்டு இருக்கலாம். இல்லேன்னா, ஏதாவது விரோதம் காரணமா– கொலை செய்யற நோக்கத்தில் கடத்தப்படலாம். இதுல, வனிதா கடத்தப்பட்டது எந்த வகைன்னு தெரியலை சார்."

"கொலை செய்யற நோக்கம் இல்லை, கார்த்திகேயன்."

"எப்படி சார் சொல்றீங்க?"

"நோக்கம் அதுவா இருந்தா, இந்நேரம் வனிதாவோட பிணம் எங்கேயாவது தட்டுப்பட்டிருக்கும்."

"அப்படின்னா... இது கடத்தல்."

"இருக்கலாம்."

'பைக்' ராமநாதனின் வீட்டு முன்னால் நின்றது. இருவரும் இறங்கி உள்ளே போக– ராமநாதன் மட்டும் எதிர்பட்டார்.

"வாங்க இன்ஸ்பெக்டர்."

"உங்க மனைவி இல்லீங்களா?"

"இல்லை... பக்கத்தில் இருக்கிற சவுடேஸ்வரி கோவிலுக்குப் போயிருக்கா. வர்ற நேரம்தான். என்ன விஷயம், இன்ஸ்பெக்டர்?"

"உங்க மகளை தேடிக் கண்டுபிடிக்கிற முயற்சியில் ஒரு தனி போலீஸ் படையே ஈடுபட்டிருக்கு. நாங்களும் வழக்கை வெவ்வேறு கோணத்திலிருந்து பார்த்து, விசாரணை பண்ணிட்டு வர்றோம். சமீபத்திய விசாரணையில் நாங்க ஒரு விஷயத்தைக் கேள்விப்பட்டோம்."

"என்ன கேள்விப்பட்டீங்க?"

"போன மாசம் வனிதாவைப் பெண் கேட்டு பெங்களூரில் இருந்து ஒரு பணக்கார வீடு வந்ததாக கேள்விப்பட்டேன், உண்மையா?"

"உண்மைதான். வந்தவங்க பெரிய இடம்... பேரு மல்லீஸ்வரன். அவரோட பையனுக்கு வனிதாவைக் கேட்டுட்டு வந்தாங்க. வனிதா தனக்கு இப்ப கல்யாணம் வேண்டாம்ன்னு

சொல்லிட்டா."

"மாப்பிள்ளையையும் கூட்டிட்டு வந்திருந்தாங்களா?"

"ஆமா."

"வனிதா கல்யாணம் வேண்டாம்னு சொன்னதுல அவங்களுக்கு ஏதாவது மனவருத்தமா?"

"அந்த மாதிரி தெரியலை... வனிதாவோட படிப்பு முடியறவரைக்கும் காத்திட்டு இருக்கோம்னு சொன்னாங்க. ஆனா, வனிதா பிடிவாதமா அந்த வரன் வேண்டாம்னு சொல்லிட்டா."

"அந்த பெங்களூர் முகவரி எனக்கு வேணும்."

"அவங்க மேல சந்தேகப்படுறீங்களா இன்ஸ்பெக்டர்?"

"இந்த வழக்கில் எல்லா திசைகளையும், போலீஸ் அலசியாகணும்."

"அவங்க முகவரி இருக்கு. தர்றேன்" சொல்லிக்கொண்டே எழுந்தவர்– வாசலில் ஆட்டோ சத்தம் கேட்டு நின்றார். திரும்பினார்.

ஆட்டோவை அனுப்பிவிட்டு, மாலினி வந்துகொண்டு இருந்தாள்.

"வாம்மா."

"உள்ளே வந்த மாலினி, இன்ஸ்பெக்டரைப் பார்த்துவிட்டு மலர்ந்தாள். "நீங்களும் இங்கேதான் இருக்கீங்களா! ஸ்டேஷனுக்குப் போற வேலை எனக்கு மிச்சம்."

"என்னம்மா– என்ன விஷயம்?"

"இப்ப நேரா கல்லூரியில் இருந்துதான் வர்றேன் சார்... வனிதா பேருக்கு ஒரு கடிதம் வந்திருக்கு."

"கடிதமா?"

"ஆமா! இதோ" சொன்னவள் தன் 'பேக்'கிலிருந்து ஒரு உறையை எடுத்து இன்ஸ்பெக்டரிடம் நீட்டினாள்.



அவர் அந்த கடிதத்தை வாங்கி அனுப்புநர் முகவரியைப் பார்த்தார்.

'ஹேமாஸ்ரீ, சென்னை.'

"ஹேமாஸ்ரீ ஒரு நடிகை இல்லையா?"

"ஆமா சார்... அவங்க ரொம்ப பிரபலம்."

"ஒரு நடிகைக்கும், வனிதாவுக்கும் என்ன உறவு இருக்க முடியும்?" மெல்ல முனகிக்கொண்டே கடிதத்தை பிரித்தார், சந்தானம்.

**அன்புள்ள ரசிகை வனிதாவுக்கு,**

**வணக்கம். வெறும் பாராட்டுக் கடிதங்களாகவே படித்துப் படித்து சலித்துப்போன எனக்கு, உங்கள் விமர்சனக் கடிதம் ஒரு 'வைட்டமின்' மாத்திரையாக இருந்தது. என் நடிப்பில் இருந்த குறைகளை அழகாக- நான் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் சுட்டிக்காட்டி இருந்தீர்கள். என்னைப் பொறுத்தவரை நீங்கள் ஒரு வித்தியாசமான ரசிகை. உங்களோடு பேசவேண்டும் என்கிற ஆவலில்தான் கடந்த பதினேழாம் தேதி ஓட்டல் 'ஹெவன்ஸ் கேட்'டுக்கு வரச்சொல்லி கடிதம் எழுதியிருந்தேன். ஆனால், நீங்கள் வரவில்லை. நீங்கள் வராமல்போனதுக்கு என்ன காரணம் என்பதை அறிந்து கொள்ள ஆர்வமாக உள்ளேன். பதில் எழுதுங்கள்.**

**அப்புறம் இன்று பாரதிராஜா படம் ஒன்றில் நடிக்க ஒப்பந்தமாகி உள்ளேன். நல்ல கதை, பிரதான கதாபாத்திரம் எனக்குத்தான். இந்தப் படம் நிச்சயமாய் எனக்கு விருது வாங்கித் தரும் என்று நம்புகிறேன். 'வைகறை நட்சத்திரங்கள்' என்கிற என் படம் அடுத்த வாரம் வெளிவருகிறது. படத்தைப் பார்த்துவிட்டு உடனடியாய் கடிதம் எழுதவும்.**

**அன்புடன்,**
**ஹேமாஸ்ரீ.**

கடிதத்தைப் படித்து முடித்துவிட்டு நிமிர்ந்த சந்தானம்– மாலினியை ஏறிட்டார். "கடிதம் எப்ப வந்தது?"

"இப்பத்தான் சார்! தபால்காரர் கடிதத்தை கையில் வைச்சுக்கிட்டு வனிதாவை தேடிகிட்டு இருந்தார்."

"ஏன் இந்த கடிதத்தை அவர் கல்லூரி தபால்பெட்டியில் போட்டிருக்கலாமே?"

"தன்கிட்டேயே கடிதத்தை கொண்டுவந்து தரணும்ன்னு வனிதா சொல்லி இருப்பா போலிருக்கு- அதனால அவளைத் தேடியிருக்கார்."

சந்தானம், கார்த்திகேயனிடம் திரும்பினார். "ஹேமாஸ்ரீ தன்னை வந்து சந்திக்கும்படியா வனிதாவுக்கு கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிற தேதி பதினேழு! வனிதா காணாம போன தேதி என்ன?"

"பதினேழு சார்."

## 14

செத்துப்போய் வெறித்த ரீட்டாவை இருவரும் அதிர்ச்சியோடு பார்த்தபடி ஸ்தம்பித்துப் போயிருந்தார்கள்.

"என்ன நண்பா! இப்படி பண்ணிட்டியே? உன் அடிக்கு இவ தாங்குவாளா? உயிரை விட்டுட்டா பாரு.."

"திருப்பித் திருப்பி ஒரே பதிலை சொல்லிட்டிருக்காளே..."

"மிரட்டித்தான் உண்மையை வாங்கணும்! விஜய்தர்மாவைப் பத்தி விவரம் தெரிஞ்சவ இவ ஒருத்திதான்."

"விஜய்தர்மாவை விடு! இவளை இப்ப என்ன பண்றது?"

"இப்படியே விட்டுட்டு அறையை காலிபண்ணிட்டு போயிடலாம்."

"இந்த ஓட்டல்ல அது முடியாது... அறையை முழுமையா 'செக்' பண்ணிட்டுத்தான் 'பில்' போடுவான்."



### விளையும் பயிர்...



ஆசிரியர் ஒருவர், பள்ளிக்கூட மாணவர்களை உல்லாசப் பயணத்திற்கு அழைத்துச் சென்றார். அவர் விடியலைப் பார்த்ததும் "மாணவர்களே... சூரியனைப் பற்றி ஆளுக்கொரு வரி சொல்லுங்கள் பார்ப்போம்" என்றார்.

உடனே ஒவ்வொரு மாணவரும் ஒவ்வொரு வரி சொன்னார்கள். அவர்களில் ஒரு மாணவர்-

"தங்கம் உருக்கி, தழல் குறைந்து
எங்கும் பரப்பியதோர் இங்கிதமோ?" என்றார்.

ஆசிரியர் அசந்துபோய் அவரை தட்டிக்கொடுத்தார். அந்த பெருமைக்குரிய மாணவர் யார் தெரியுமா? மகாகவி பாரதி!

*-ஆ. ரவிச்சந்திரன், குன்னத்தூர்.*

"சொல்லாமே கொள்ளாமே வெளியே போயிடலாமா?"

"அதுவும் சிக்கல்தான்."

"வேறு என்ன பண்றது?"

"ஒரு வழி இருக்கு."

அறைக்குள் நுழைந்து- வனிதாவுக்கு பக்கத்தில் வந்து நின்றார்கள். சேதும், யூசப்பும். வனிதா அவர்களை மிரட்சியாய் பார்த்தாள்.

சேது சிரித்தான்.

"என்ன பார்க்கிறே? இன்னும் கொஞ்ச நேரத்துல உனக்கு விடுதலை... விடுதலைன்னா சாதாரண விடுதலை இல்லை... இந்த உலகத்தைவிட்டே விடுதலை."

வனிதா திக்கென்று பார்த்துக்கொண்டிருக்கும் போதே- யூசுப் மயக்க மருந்து தெளிக்கப்பட்ட கைக்குட்டையால் அவளுடைய முகத்தில் பொத்தினான்.

சரியாய் அரை நிமிடம்... வனிதா தலை துவண்டாள்.

வாயில் ஒட்டியிருந்த பிளாஸ்டரையும், கைகளைப் பிணைத்துக்

கட்டியிருந்த கயிறையும் எடுத்துவிட்டு அவளை அள்ளிக் கொண்டார்கள். வெளியே வந்து, இருட்டில் நின்றிருந்த ஒரு பழைய காரின் பின் இருக்கையில் அவளைக் கிடத்தினார்கள்.

யூசுப் அவளுக்குப் பக்கத்தில் உட்கார்ந்துகொள்ள- சேது காரை விரட்டினான். ஒரு பதினைந்து நிமிடம் பிரதான சாலையில் ஓடிய கார்- இடக்கை பக்கமாய் பிரிந்த கிளைப் பாதைக்குள் நுழைந்தது.

"சேது.."

"ம்.."

"குளம் எவ்வளவு ஆழம் இருக்கும்?"

"வெயில் காலத்திலேயே பதினைஞ்சு அடி இருக்கும்."

"வனிதாவை இன்னிக்கு குளத்துல போட்டா மூணாவது நாள் மிதப்பா இல்லையா?"

"ஆமா."

கார் மண்பாதையில் குதித்து குதித்து ஓடி- ஒரு பத்து நிமிட பயணத்திற்குப் பின்- ஒரு மரத்திற்கு கீழே போய் நின்று- விளக்கு வெளிச்சத்தை அணைத்துக்கொண்டது. இருவரும் காரைவிட்டு இறங்கினார்கள்.

அமாவாசை ஆகாயம், நட்சத்திரங்களை மட்டும் அழைத்திருக்க- நிலாவை 'விலக்கு' செய்திருந்தது. அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் இருட்டு ஆர்ப்பாட்டம் நடத்த- குளத்து நீர்- கறுப்பாய் காற்றில் அலைந்தது. நாணல் புற்களுக்கு இடையே தவளைகளும், சில்வண்டுகளும்- கோஷ்டி கானம் செய்தன.

சேதுவும், யூசுப்பும் சுற்றும் முற்றும் ஒரு தடவை பார்த்துவிட்டு, காரின் பின் கதவைத் திறந்து- வனிதாவை வெளியே எடுத்தார்கள்.

யூசுப் சிரித்தான்.



"மயக்கம் தெளியாமலே சமாதியாகப்போறா அம்மணி."

இருவரும் அவளைத் தூக்கிக்கொண்டுபோய்- குளக்கரை ஓரமாய் நின்று தண்ணீருக்குள் தூக்கி எறிந்தார்கள்.

ஏராளமான நீரை சிதறடித்துக்கொண்டு- குளத்துப் பரப்புக்குள் விழுந்த வனிதா, தண்ணீரில் சுலபமாய் மூழ்கி, ஆழத்தை நோக்கிப் போனாள்.

## 15

வெளியே போன ஒருவன் ஒரு பெரிய சூட்கேசோடு- அரை மணி நேரம் கழித்து உள்ளே வந்தான்.

"தண்பா... ரீட்டாவை இதுல கச்சிதமா அடக்கி- நம்ம பொருட்களோடு பொருளா வெளியே கொண்டுபோயிடப் போறோம்."

"திடீர்ன்னு போலீஸ் வந்து.. சூட்கேசை திறந்து காட்டச் சொன்னா பேஜாரா போயிடும்."

"போலீஸ் இப்ப எதுக்கு வருது?"

"நாம சமாளிக்க வேண்டிய ஒரே ஆள்- ரீட்டாவை கொண்டுவந்துவிட்ட அந்த 'மாமா'தான்."

"அவன் காலையில்தானே வருவான்."

"சரி... ரீட்டாவை எடுத்து மொதல்ல சூட்கேசுக்குள் திணிப்போம்... அப்புறம், வரவேற்பில் 'பில்' போடச் சொல்லுவோம்."

"கதவை சரியா பூட்டலையா? காத்துல ஆடுது பாரு."

அவன் சொல்லிக்கொண்டிருந்த அதே விநாடி-

குளக்கரையைச் சுற்றிலும் ஆட்கள் திட்டுத் திட்டாய் தெரிந்தார்கள். ரத்தச் சிவப்பில் ஒரு தீயணைப்பு வேன். பனிரெண்ற வெள்ளையில் போலீஸ் வேன்... கெட்டியான

கருப்பில் ஒரு சவஊர்தி... வரிசையாய் நின்றிருக்க —இன்ஸ்பெக்டர் ஒருவர் தலைமைக் காவலரிடம் விசாரித்துக் கொண்டிருந்தார்,

"மக்கள்கிட்டே விசாரணை பண்ணினியா?"

"பண்ணினேன் சார்... குளத்தில் மிதந்துட்டிருந்த பெண்ணை யாருக்கும் அடையாளம் தெரியலை.."

"ஒவ்வொருத்தரையா வந்து பார்க்கச் சொன்னியா..?"

"பார்க்கச் சொன்னேன் சார்... எல்லாரும் உதட்டைப் பிதுக்கினாங்க.."

"பொண்ணு நிறமா... அழகா இருக்கா.."

"தற்கொலையா... கொலையான்னு தெரியலை சார்.."

"தற்கொலை மாதிரிதான் தெரியுது சார்."

"எப்படி சொல்றே..?"

"பிணத்தில்... ரத்தக்காயம் எதுவுமில்லை சார்.."

"கழுத்தைப் பார்த்தியா..?"

"பார்த்தேன் சார்... கண்ணும்... நாக்கும் வெளியே தள்ளலை.."

"பிணத்தை மொதல்ல பார்த்த ஆள் யாரு..?"

"அதோ.. அந்த பெரியவர்தான்.."

"அவர்கிட்டே ஒரு வாக்குமூலம் வாங்கிக்க.."

"எஸ் சார்.."

"போலீஸ் போட்டோகிராபர் எங்கே..?"

"நான் இங்கேதான் இருக்கேன் சார்.." ஒரு இளைஞன் கையில் காமிராவோடு பக்கவாட்டில் இருந்து வெளிப்பட்டான்.

"பிணத்தை 'போட்டோ' எடுத்துட்டீங்களா..?"

"எடுத்துருக்கேன் சார்.."

"முகம் நல்லா பளீர்னு தெரியற மாதிரி... அஞ்சாறு



டம் வேணும்.."

"பத்திரிகைகளுக்கு குடுக்கத்தானே சார்?"

"ஆமா.."

"எடுத்திருக்கேன் சார்.."

பரிசோதனை முடிவைப் பார்த்துவிட்டு சப்-இன்ஸ்பெக்டர் வந்தார். "சார்! பொண்ணு செத்து மூணு நாளாகி இருக்கலாம். சுற்றுவட்டார போலீஸ் ஸ்டேஷன்களுக்கு தகவல் கொடுத்தா ஏதாவது விவரம் தெரியலாம். பொண்ணை காணோம்னு யாராவது புகார் பண்ணி இருக்கலாம்.."

"தற்கொலையா இருந்தா பரவாயில்லை. இல்லேன்னா வர்ற பத்து நாளைக்கு— தாலி அறுத்துடும்."

## 16

அந்த தபால்காரர் நெற்றியில் நாமமிட்டு, தாடையில் முள்முள்ளாய் நரைத்தாடி வளர்த்து — ஒற்றை நாடி சரீரத்தில் இருந்தார். போஸ்ட்மாஸ்டர் கூப்பிட்டு அனுப்பிய போது— "ததரீன்னா.. ஆ..ஆ.' என்று சங்கீதத்தை முணுமுணுத்துக்கொண்டே வந்தவர், ஒரு இன்ஸ்பெக்டரும், சப்-இன்ஸ்பெக்டரும் அவரிடம் விசாரிக்க வந்திருப்பதாகச் சொன்னதும்— சின்னதாய் குழப்பத்தில் விழுந்தார்.

சந்தானம் கேட்டார்.

"கலைக்கல்லூரி 'பீட்' நீங்கதானே...?"

"ஆமா.."

"அந்தக் கல்லூரி மாணவி... வனிதாவை தெரியுமா உங்களுக்கு?"

"பி.ஏ. பொருளாதாரம் படிக்கிற இரண்டாம் ஆண்டு மாணவிதானே?"

## 'தங்க' சவப்பெட்டி

★ உலகின் முதல் நூலகம் கி.மு. 2500-ம் ஆண்டில் பாபிலோனியாவில் உருவானது. 'அமில் அனு' என்ற அரசன் இந்நூலகத்தை உருவாக்கினார்.

★ எகிப்தில் உள்ள கெய்ரோ அருங்காட்சியகத்தில் தங்கத்தால் செய்யப்பட்ட, ஒரு அரசனின் சவப்பெட்டி உள்ளது. இது, 62 அடி நீளமுள்ளது.

## பள்ளி விடுமுறை

★ ஒவ்வொரு நாட்டிலும் பள்ளிக்கூட விடுமுறை நாட்கள் வேறுபடுகின்றன.

| | | |
|---|---|---|
| இத்தாலியில் | – | 150 |
| அயர்லாந்தில் | – | 130 |
| ஐக்கிய நாடுகளில் | – | 116 |
| பிரான்சில் | – | 110 |
| கனடாவில் | – | 102 |
| இங்கிலாந்தில் | – | 94 |
| ஆஸ்திரேலியாவில் | – | 85 |
| ஜெர்மனியில் | – | 75 |

இந்தியாவில் – 100 முதல் 140 நாட்கள் வரை விடுமுறை நாட்கள்.

–ஆர். அஜிதா, கம்பம்.



"ஆமா...?"

"தெரியும்..."

"அந்தப் பொண்ணு காணாம போனது பத்தி...?"

"வனிதாவோட தோழி சொன்னா..."

"வனிதாவுக்கு காலேஜ் அட்ரஸ் போட்டு நிறைய கடிதம் வருமா...?"

"எப்படியும் வாரத்துக்கு ஒரு கடிதமாவது நடிகை ஹேமாஸ்ரீகிட்ட இருந்து வரும்..."

"வேறு யார்கிட்டே இருந்தும் வர்றதில்லையா?"

"இல்லை..."

"பொதுவா மாணவர்களுக்கு வர்ற கடிதங்களை பெட்டியில் போடுறதுதானே வழக்கம்?"

"ஆமா... ஆனா... வனிதா அந்த நடிகைகிட்டே இருந்து வர்ற கடிதத்தைத் தன்னோட கையிலேயே கொடுக்கும் படியா சொல்லுவா..."

"ஏன் அப்படி...?"

"வனிதா அந்த நடிகையோட பரம விசிறியாம். பைத்தியம்னு கூட



சொல்லலாமாம். கல்லூரியில் மத்த பொண்ணுங்க கையில் கடிதம் கிடைச்சா... அவளை கலாட்டா பண்ணுவாங்களாம். அவளோட அப்பாவுக்கும் இதெல்லாம் பிடிக்காதாம். நான் போய் கடிதத்தைக் குடுத்ததுமே... வாங்கிப் படிச்சுட்டு... உடனே கிழிச்சுப் போட்டுடும்..."

"அந்த நடிகையைத் தவிர வேறு யாரும்... வெளியிலிருந்து கடிதம் போடமாட்டாங்களா?"

"போட்டதில்லை சார்..."

விசாரணையை முடித்துக்கொண்டு வெளியே வந்தார்கள் சந்தானமும், கார்த்திகேயனும்.

"சார்... நம்ம அடுத்த நடவடிக்கை...?"

"ஓட்டல் 'ஹெவன்ஸ் கேட்'டுக்குப் போறோம்..."

"சரி சார்?"

"நடிகை ஹேமாஸ்ரீகிட்ட இருந்து வனிதாவுக்கு வந்த கடிதத்துல ஒரு 'க்ளு' இருக்கு. ஓட்டல்ல தங்கி இருக்கிற தன்னை வந்து பார்க்கும்படியா... வனிதாவை அவ வேண்டி இருக்கா... ஆக, வனிதா அன்னிக்கு கல்லூரியில் இருந்த ஸ்பெஷல் வகுப்பை 'கட்' பண்ணிட்டு... நேரா... ஓட்டல் ஹெவன்ஸ் கேட்டுக்கு ஹேமாஸ்ரீயைப் பார்க்கப் போயிருக்கா... பார்க்கப்போன அந்த இடத்துலதான் அவளுக்கு ஏதாவது ஆகி இருக்கணும்..."

"சார்..."

"சொல்லுங்க கார்த்திகேயன்."

"தன்னை வந்து ஏன் பார்க்கலைன்னு... காரணம் கேட்டு ஹேமாஸ்ரீ கடிதம் எழுதி இருக்கிறதை வெச்சுப் பார்க்கும்போது– வனிதா அந்த ஓட்டலுக்குத்தான் போனாளா, இல்லை... வேறு எங்கேயாவது போனாளான்னு சந்தேகம் வருது..."

"எதுக்கும் போய் ஹெவன்ஸ் கேட் ஓட்டல்ல விசாரிச்சுடுவோம். அங்கே ஏதாவது ஒரு சின்ன பிடி

கிடைச்சாலும் போதுமே...?"

கிளம்பினார்கள்.

## 17

ஓட்டல் ஹெவன்ஸ் கேட்.

கவுண்டரில் இருந்த வரவேற்பு இளைஞன் போலீஸ் சீருடையைப் பார்த்ததும்– பார்த்துக்கொண்டிருந்த ஆவணங்களை நகர்த்தி வைத்துவிட்டு எழுந்தான்.

"எஸ்."

"ஒரு வழக்கு விஷயமா எங்களுக்கு சில விவரங்கள் தேவை."

"என்ன விவரம்?"

"போன பதினேழாம் தேதி மாலை. நாலரை மணிக்கு மேல் இந்த கவுண்டரில் இருந்தது யாரு...?"

யோசித்தவன் "நான்தான்..." என்றான்.

சந்தானம், கார்த்திகேயனைப் பார்க்க– அவர் தன் சட்டை பாக்கெட்டில் இருந்து– வனிதாவின் போட்டோ ஒன்றை எடுத்து அவனிடம் நீட்டினார்.

"இந்தப் பெண்ணை எங்கேயாவது பார்த்திருக்கீங்களா...?"

அவன் பார்த்துவிட்டு உடனே உதட்டைப் பிதுக்கினான்.

"இல்லை..."

"கொஞ்சம் நிதானமாக யோசிச்சு சொல்லுங்க... போன பதினேழாம் தேதி சாயந்தரம் இந்தப் பெண் இங்கே வந்து ஏதாவது விவரம் கேட்டாளா...?"

அவன் யோசித்துவிட்டு தலையாட்டினான்.

"சாரி சார்... ஞாபகமில்லை."



"சரி... அதே தேதியில் நடிகை ஹேமாஸ்ரீ இந்த ஓட்டலில் தங்கி இருந்தாங்களா...?"

"ஆமா... ஒரு படப்பிடிப்புக்காக வந்தவங்க... இந்த ஓட்டலலதான் ரெண்டு நாள் தங்கினாங்க."

"அவங்களைப் பார்க்க யாராவது வந்தாங்களா...?"

"அவங்க இங்கே தங்கி இருந்தது யாருக்குமே தெரியாது... ஆமா, எதுக்காக இந்த விசாரணைன்னு நான் தெரிஞ்சுக்கலாமா...?"

"அந்த நடிகையைப் பார்க்கிறதுக்காக– புறப்பட்டு வந்த இந்தப் பெண்ணைக் காணோம்..."

"அப்படியா...?" என்று ஆச்சரியப்பட்டவன்– "ஒரு நிமிடம் ப்ளீஸ்" என்று சொல்லிவிட்டு– ஒரு லெட்ஜரை எடுத்தான்.

பக்கங்களைப் புரட்டி– ஒரு இடம் வந்ததும் நிறுத்தினான்.

"அந்தப் பொண்ணு பேரு...?"

"வனிதா..."

அவன் நிமிர்ந்தான். "அன்னிக்கு நடிகை ஹேமாஸ்ரீ ரெண்டு, மூணு தடவை இண்டர்காம்ல தொடர்புகொண்டு வனிதாங்கிற பெண் என்னைத் தேடி வந்தாங்களான்னு கேட்டாங்க..."

"அப்படியா...?"

"இந்த வழக்கு விஷயத்தில் இன்னொரு உபயோகமான தகவலையும் என்னால தரமுடியும்."

"என்ன...?"

"அதே நாளில்... ரீட்டாங்கிற விபசார பெண் ஒருத்தியை யும் காணோம். அவ காணாம போனது சம்பந்தமா... இங்கே அறை எடுத்து தங்கின ரெண்டு பேரை நாங்க சந்தேகப்படுறோம்..."

"யார் அவங்க...?"

"பொய்யான பெயர், முகவரி கொடுத்து அறை எடுத்திருந்தாங்க. அறை எடுத்ததுமே பொண்ணுங்க வேணுமுனு கேட்டாங்க. புரோக்கர் மூலமா... ரீட்டாங்கிற பெண்ணை அனுப்பி வெச்சோம். அறைக்குள்ளே என்ன நடந்ததுன்னு தெரியலை... ரீட்டாவைக் காணோம். அவங்க மட்டும் அறையைக் காலிப் பண்ணிட்டுப் போயிட்டாங்க..."

"போலீசில் புகார் செய்திருக்கீங்களா...?"

"இல்ல சார்... அந்த புரோக்கர் தனிப்பட்ட முறையில் ரீட்டாவை தேடுற முயற்சியில் ஈடுபட்டிருக்கான்."

"இங்கே வந்து தங்கின ஆட்கள் எப்படி இருந்தாங்கன்னு சொல்ல முடியுமா...?"

"இந்தக் கேள்விக்கு என்னைக் காட்டிலும் 'ரூம் பாய்' நட்ராஜ் சரியான பதிலைச் சொல்லுவான் சார். ஏன்னா... அந்த ரெண்டு பேரையும் நல்லா பார்த்து, 'ஸ்காட்ச்' அது இதுன்னு 'சப்ளை' பண்ணினவன் அவன்தான்... அவனைக் கூப்பிடுறேன். விசாரியுங்க." சொன்ன வரவேற்பாளர் அந்தப் பக்கமாய் போன ஒரு பேரரைக் கூப்பிட்டு– ரூம் பாய் நட்ராஜை வரவழைத்தான்.

போலீசைப் பார்த்ததும்– முதலில் பயந்த நட்ராஜ்– பின் சுதாரித்துக்கொண்டு பேசினான். அவர்களைப் பற்றின அடையாளங்களைச் சொன்னான்.

சந்தானம் கேட்டார்.

"ரெண்டு பேரும் பேரைச் சொல்லிக் கூப்பிட்டுகிட்டாங்களா...?"

"இல்ல சார்..."

"ஆட்களை மறுபடியும் பார்த்தா கண்டுபிடிச்சுடுவியா?"

"கண்டிப்பா சார்..."

சந்தானம் திரும்பினார். "கார்த்திகேயன்! ஒரு காரியம் பண்ணுங்க..."



"சொல்லுங்க சார்..."

"ஸ்டேஷனுக்குப் போய்... பழைய குற்றவாளிகளோட பைலையும், ஆல்பத்தையும் கொண்டாங்க. பையன் பார்த்து சொல்லட்டும்..."

கார்த்திகேயன் போலீஸ் நிலையத்துக்குப் புறப்பட்டுப் போய்– அரைமணி நேரத்தில் பழைய குற்றவாளிகளின் ஆல்பத்தோடும், பைலோடும் வந்தார்.

சந்தானம் ரூம் பாயை தன் பக்கத்தில் உட்கார்த்தி வைத்துக் கொண்டு– ஆல்பத்தில் ஒவ்வொரு படமாகக் காட்டிக்கொண்டு வந்தார்.

கிட்டத்தட்ட அரை மணி நேரம்.

'ரூம் பாய்' திடும்மென்று ஒரு படத்தின் மேல் கையை வைத்து கத்தினான். "அந்த ரெண்டு பேர்ல ஒருத்தன் இவன் மாதிரியே இருந்தான் சார்..."

சந்தானம் அந்தப் படத்தின் எண்ணைப் பார்த்துவிட்டு பைலைப் புரட்டி– அந்த எண்ணுக்குரிய 'பயோடேட்டா'வை எடுத்தார்.

படித்தார்.

பெயர் சேது... வயது இருபத்தேழு... சொந்த ஊர் வாளையார்... சிறைவாசம் இரண்டு முறை... தொழில் கள்ளக்கடத்தல்... விஜய்தர்மாவின் பழைய ஆட்களில் இவனும் ஒருவன்... இவனுடைய இணைபிரியாத நண்பன் யூசுப்– ஹெராயின் கடத்தும் கோஷ்டியில் இருந்தவன். சேதுவின் இன்னொரு கூட்டாளி சங்கு என்கிற சங்கரன், தற்போது ஆயுள் தண்டனைக் கைதியாக கோயமுத்தூர் சிறையில் இருக்கிறான்."

சந்தானம் நிமிர்ந்தார்.

"கார்த்திகேயன்! இந்த சங்கரனை உலுக்கினா– சேதுவும்– யூசுப்பும் இருக்கிற இடம் தெரிஞ்சுடும்."

எழுந்துகொண்டார்கள்.

# 18

சங்கு என்கிற சங்கரன்– சப்–இன்ஸ்பெக்டர் கார்த்திகேயன் உதைத்த நான்காவது பூட்ஸ் உதையில்– மண்டியிட்டு, "சொல்றேன் சார்" என்றான்.

"சொல்லு.."

இரண்டு முகவரிகளைச் சொன்னான்.

ஒன்று உள்ளூர்.

இன்னொன்று பாண்டிச்சேரி.

உள்ளூர் முகவரிக்கு 'பைக்'கை விரட்டினார்கள். சாயந்தரம், இரவாய் மாறும் நேரம்.

நகரைவிட்டு தள்ளி இருந்தது முகவரி.

விரிவாக்க பகுதி. வீடுகள் இன்னும் முளைக்கவில்லை. எங்கோ ஒரு கட்டிடம் கண்ணுக்கு சிக்கியது.

'பைக்'கை விரட்டி– அந்தச் சிறிய வீட்டுக்கு முன்னால் கொண்டுபோய் நிறுத்தி, மவுனமாக்கினார்கள். சுண்ணாம்பு பூச்சு காலாவதியாகி– ஆங்காங்கவே செங்கற்கள் இளித்தன. 'பெயிண்ட்' உதிர்ந்துபோன கதவில்– பூட்டு தொங்கியது.

"சார்... வீடு... பூட்டி இருக்கு..."

சந்தானம் சுற்றும் முற்றும் பார்த்தார்.

அறவே ஆள் நடமாட்டம் இல்லை...

"சமூக விரோதிகளுக்கு வசதியான பகுதிதான் இது..."

"என்ன சார் பண்ணலாம்?"

"பூட்டை உடைச்சு உள்ளே பார்த்துடலாம்..." –சொன்னவர் சட்டென்று குரலைத் தாழ்த்திக்கொண்டார்.

"கார்த்திகேயன்..."

"சார்..."



"வீட்டுக்குள்ளே யாரோ இருக்காங்கன்னு நினைக்கிறேன்.. இந்த பூட்டு..! போலீசையும், மத்தவங்களையும் ஏமாத்தறதுக் காக.."

"கதவைத் தட்டலாமா..?"

"வேண்டாம்.. வீட்டுக்குப் பின்பக்கமா போலாம் வாங்க.."

போனார்கள்.

சாத்திக்கிடந்த ஜன்னலும்– அதற்கு மேலே லேசாய் திறந்திருந்த வெண்டிலேட்டரும் கண்ணில் பட்டன.

கார்த்திகேயன் பெயர்த்திருந்த செங்கற்களின் மேல் காலை வைத்து– லாவகமாய் ஏறி 'வெண்டிலேட்டர்' வழியே எட்டிப் பார்த்தார்.

இரண்டு பேர்களின் சீட்டாட்டம் தெரிந்தது.

பக்கவாட்டில் சேதுவின் முகம்.

கார்த்திகேயன் சத்தமில்லாமல் கீழே இறங்கி– சந்தானத்திடம் கிசுகிசுத்தார். "சேது உள்ளே இருக்கான் சார்.."

"இனி உள்ளே போக வேண்டியதுதான்.." சொன்னவர்கள் சுவரைத் தாண்டி குதித்து உள்ளே போனார்கள்.

சேது சீட்டை கீழே இறக்கி– "தோஸ்த்! ஆட்டம் குளோஸ்"– என்று உற்சாகச் சத்தம் போட்டபோது– சந்தானம் துப்பாக்கியோடு அவன் முன்னே போய் நின்றார்.

சேதுவும், யூசுப்பும் திடுக்கிட்டுப்போய் எழுந்தார்கள். கையில் வைத்திருந்த சீட்டுக்கட்டு தானாக உதிர்ந்தது.

கார்த்திகேயன் உறுமினார்.

"வனிதாவும், ரீட்டாவும் எங்கே..?"

"........"

ரத்தக்களறியாய் உதைபட்ட பின்– யூசுப் உண்மைகளைச் சொல்ல தொடங்கினான். "சார்... போன பதினேழாம் தேதி, ஓட்டல் ஹெவன்ஸ் கேட்ல அறை எடுத்து தங்கினது

# பூவரசு மகத்துவம்

வெண்தழும்பு, வெண்புள்ளி நோயால் அவதிப்படுவோர், புளி இல்லாத குழம்பை இறக்கும் நேரத்தில் பூவரசமர இலைகள் ஐந்தை கழுவி, சுத்தம் செய்து போட்டு, பாத்திரத்தை மூடி, குழம்பை இறக்கி வைத்துவிடவும்.

பத்து நிமிடங்கள் சென்றதும் இலைகளை எடுத்துவிட்டு, அந்த குழம்பை சோற்றில் ஊற்றி சாப்பிடவும். தினமும் இப்படி செய்துவர வெண்தழும்பு மாறி, தோல் பழைய நிறத்தை அடையும்.

இதுதவிர, மிளகுப் பொங்கல் சாப்பிடுவதும், உணவில் சுண்டைக்காய், கையாந்தரைக்கீரை சேர்ப்பதும் நல்லது.

—க.கோ. மணிவாசகம், தேவூர்.

நாங்கதான். எங்க பழைய நண்பர் விஜய்தர்மாவைப் பத்தின தகவல்களை தெரிஞ்சுக்கிறதுக்காக– ரீட்டாங்கிற விபசாரியைத் தேடிகிட்டுப் போனோம்... அவளை தந்திரமா அறைக்கு வரவழைச்சு... உண்மைகளை தெரிஞ்சுக்கிற முயற்சியில்– கொஞ்சம் வன்முறை காட்டப்போய்... அவ இறந்துட்டா...

செத்துப் போனவளை வெளியே கொண்டுபோய் 'டிஸ்போஸ்' பண்ணுறதுக்காக– அவளை பெரிய சூட்கேஸ்ல– அடைக்க முயற்சி பண்ணினபோது... வனிதா கதவைத் திறந்துகிட்டு உள்ளே வந்துட்டா... அவ நடிகை ஹேமாஸ்ரீயைப் பார்க்கிறதுக்காக 196–ம் அறையை நோக்கி போய்கிட்டு இருந்தவ– ஞாபகமறதியா எங்களோட 169–ம் அறைக்குள் நுழைஞ்சுட்டா... எல்லாமே சில நொடிகள்தான்... ரத்தம் கக்கிச் செத்து கிடந்த ரீட்டாவைப் பார்த்ததும் வனிதா மயக்கமாகி, எங்க அறைக்குள்ளேயே விழுந்துட்டா..."

சந்தானம் தொடர்ந்தார். "அவ மயக்கம் தெளிஞ்சு எந்திரிச்சதும்... உங்களைக் காட்டிக்குடுத்துடுவாள்னு நினைச்சு– அவளையும் கொண்டு வந்துட்டீங்க இல்லையா...? ரீட்டாவோட பிணத்தை என்ன பண்ணீங்க...?"

"எரிச்சுட்டோம்... சார்..."





சார்.. இப்ப வனிதா எங்கே..?"

சேதுவும், பூசுப்பும் ஒருத்தரையொருத்தர் பார்த்துக்கொண்டு உதட்டை நாவால் நீவிக்கொண்டு- வியர்த்தார்கள்.

"கேட்டது காதுல விழலை..?"

"சார்.. வந்து.. வனிதாவை.."

"வனிதாவை...?"

"வழுக்குப்பாறை குளத்துல தள்ளி.. கொன்னுட்டோம்.."

சந்தானமும், கார்த்திகேயனும் அதிர்ந்துபோய்- நெருப்பு சூடு பட்ட மாதிரி நிமிர்ந்தார்கள்.

## 19

**வ**ழுக்குப்பாறை காவல்நிலையம்.

அதன் முன்பாய் ஜீப்பை நிறுத்திவிட்டு- சந்தானமும், கார்த்திகேயனும் உள்ளே போக- இன்ஸ்பெக்டர் நாயர், நரை மீசைக்கு கீழே சிரித்து வரவேற்றார்.

"இந்த வழக்கால் இரண்டு நாள் தூக்கம் போச்சு. பிரேத பரிசோதனை அறிக்கையும் ஒரே குழப்பம். நீங்க போன் பண்ணி பேசினதுக்கு அப்புறம்தான் இது கொலைங்கிற முடிவுக்கு வந்தேன்..."

இருவரும் உட்கார்ந்தார்கள்.

"போன்ல பொண்ணோட பேர் என்னான்னு சொன்னீங்க?"

"வனிதா..."

"அழகான பொண்ணு..." சொல்லிக்கொண்டே மேசையின் இழுப்பறையைத் திறந்து- உறைக்குள் இருந்த புகைப்படங்களை உருவி- சந்தானத்திடம் நீட்டினார்.

வாங்கிப் பார்த்த- சந்தானம் திடுக்கிட்டார்.



"மிஸ்டர் நாயர்.."

"எஸ்.."

"குளத்தில் பிணமா மிதந்த பெண்.. இவளா..?"

"ஆமா..?"

"இது வனிதா இல்லை.."

இப்போது நாயர் நிமிர்ந்து உட்கார்ந்தார்.

"என்னது.. இவ வனிதா இல்லையா...?"

"ஆமா."

"அப்ப வனிதா என்ன ஆனா..?"

"அதான் குழப்பமா இருக்கு... சேதுவும், பூசுப்பும்... வனிதாவைத்தான் குளத்தில தள்ளினதா சொன்னாங்க...! ஆனா.. இந்தப் படத்தில் இருக்கிற பெண் வேற யாரோ..?"

"சேது பொய் சொல்றானா...?"

"அவன் எதுக்காக பொய் சொல்லணும்? தன் மேல அவன் வலிய கொலைப் பழியைப் போட்டுக்கொள்ள அவனுக்கு பைத்தியமா பிடிச்சிருக்கு...?"

"இந்தப் பொண்ணு யாரு...? குளத்துல... மயக்கமான நிலையில தள்ளப்பட்ட வனிதா என்ன ஆனா...?" நெற்றியை அவஸ்தையில தேய்த்துக்கொண்ட சந்தானம், நாயரிடம் நிமிர்ந்தார்.

"இந்தப் பெண் பிணமா கண்டெடுக்கப்பட்ட இடத்தில் வேற ஏதாவது தடயங்கள் கிடைச்சுதா...?"

"உபயோகமான தடயம் எதுவும் இல்லை. இந்தப் பெண்ணோட உடைகள், காதில் கிடந்த தோடு- கழுத்தில் இருந்த டாலர் செயின்.. இவைகளை மாத்திரம் பத்திரப்படுத்தி வெச்சிருக்கோம்..."

"அதையெல்லாம் பார்க்கலாமா..?"

ஒரு காவலர் கொண்டு வந்து கொடுக்க- பார்த்தார்கள். டாலர் செயினை சந்தானம் புரட்டிப் பார்த்துவிட்டு-

திகேயனிடம் காட்டினார்.

"டாலரைப் பார்த்தீங்களா கார்த்திகேயன்...?"

"கேரள 'டிசைன்' மாதிரி தெரியுது சார்..."

"அதேதான்... டாலரோட வலப்பக்க மூலையில் வட்ட வட்டமா ஏதோ... தெரியுதே- அது என்னான்னு உங்களுக்குப் பிடிபடுதா...?"

"அதுவும் 'டிசைன்'தான்..." நாயர் குறுக்கிட்டுச் சொன்னார்.

சந்தானம் புன்னகையோடு எதிட்டார். "வட்ட வட்டமா தெரியறது 'டிசைன்' இல்லை மிஸ்டர் நாயர். உங்க மலையாள எழுத்துகள்தான்... அப்படி ஸ்டைலா எழுதி இருக்காங்க..."

"அப்படியா?"

கண்ணாடியை மாட்டிக்கொண்டு- மறுபடியும் உற்றுப் பார்த்த அவர் மலர்ந்தார். "சரியா சொன்னீங்க மிஸ்டர் சந்தானம்... என்னோட பார்வைக்கு இது பிடிபடலை. அந்த மலையாள எழுத்துகள் ஒரு நகைக் கடையோட பெயர் சுருக்கம்- பி.ஆர்.கே."

## 20

பி.ஆர்.கே. நகைக்கடை திருச்சூரில் இருந்தது. கார்த்திகேயன் அன்றே திருச்சூர் போய்- ஒரு நாள் முழுக்க அலைந்து- விவரங்களைச் சேகரித்து வந்தார்.

சந்தானம் கேட்டார்.

"யாரந்த பொண்ணுங்கிற விவரம் கிடைச்சதா கார்த்திகேயன்?"

"கிடைச்சுது சார். பொண்ணோட சொந்த ஊர் திருச்சூர்தான். பேரு கலாவதி. சென்னையில் மதுன்னு ஒருத்தருக்கு அவளைச்



கல்யாணம் பண்ணிக் கொடுத்து ஆறுமாசம்தான் ஆகுது."

"மதுவோட முகவரி?"

"நம்பர் 65. ஆடேங் ரோடு- மந்தைவெளி."

"மந்தைவெளி போலீஸ் நிலையத்துக்கு போன் பண்ணி, இந்தப் பெண்ணை காணலைன்னு யாராவது புகார் பண்ணி இருக்காங்களான்னு விசாரியுங்க."

கார்த்திகேயன் ஒரே நிமிடத்தில் விசாரித்து சொன்னார்.

"மது புகார் பண்ணி இருக்கார் சார்..."

சந்தானம் குழப்பமாய் மோவாயை வருடினார். "சேதுவும், யூசுப்பும் வனிதாவை குளத்துக்குள்ளே தள்ளினப்புறம் என்ன நடந்தது? ரெண்டு நாள் கழிச்சு... வனிதாவுக்கு பதிலா... கலாவதியோட பிணம் மிதந்திருக்கு- அப்படீன்னா... கலாவதியைக் கொலை செஞ்சு குளத்தில் தள்ளியவனுக்குத் தான்... வனிதாவைப் பத்தின உண்மை தெரிய வாய்ப்பிருக்கு. ஆக, மொதல் காரியமா... கலாவதியைக் கொலை பண்ணின ஆள் யாருன்னு கண்டுபிடிக்க வேண்டியது அவசியம்..."

"மதுவை விசாரிச்சா... ஏதாவது தகவல் கிடைக்கலாம் சார்."

"இப்ப அங்கேதான் போறோம்..."

## 21

நகரைவிட்டு தள்ளியிருந்த கடற்கரை பங்களா, அது. உள் அறையொன்றில்- கட்டிலின் மேல் மது உட்கார்ந்திருக்க- சுவரோரமாய் நடுங்கிக்கொண்டு வனிதா நின்றிருந்தாள்.

மது சிரித்தான்.

"என்ன வனிதா... இன்னும் எவ்வளவு நேரம்தான் அந்த சுவரோரமாவே நின்னுட்டிருப்பே...? இப்படி என் பக்கத்துல

வந்து உட்காரு.."

வனிதா பின்வாங்கினாள்.

"வே... வேண்டாம்.."

"சரியாப் போச்சு...! வேண்டாம்னு சொல்றதுக்கா... உன்னை வழுக்குப்பாறை குளத்திலிருந்து காப்பாத்திக் கொண்டு வந்தேன். அந்த அர்த்தராத்திரியில எனக்கு அடிச்ச 'ஜாக்பாட்' பரிசு நீ...! என்னோட தொழிலே... அழகான பெண்களை வெச்சு... சதை வியாபாரம் பண்ணுறதுதான்... தொழிலோட மூலதனத்துக்காக இதுவரை நாலு பெண்களை வெவ்வேறு மாநிலத்தில் போய் கல்யாணம் பண்ணி, கூட்டி வந்திருக்கேன்.. அவங்களை வியாபாரத்துக்கு பயன்படுத்திட்டு... அப்புறம் ஒருநாள்.. தீர்த்துக்கட்டிட்டு... வேறு ஒரு மாநிலத்துக்கு போய் பெண்ணைத் தேடுறதுதான் என்னோட வேலை..

என் நாலாவது பெண்டாட்டி கலாவதிக்கு நோய் வந்து.. தொழிலுக்கு உபயோகப்படாமே போயிட்டா...! அதான் அவளுக்கு மயக்க மருந்தை குடுத்து 'டிஸ்போஸ்' பண்ண வழுக்குப்பாறைக் குளத்துக்கு கொண்டு வந்தேன். உன்னையும், ரெண்டு பேர் அதே காரியத்துக்காக கொண்டு வந்தாங்க. மறைஞ்சு நின்னு பார்த்தேன். அந்த இருட்டிலேயும்.. நீ அழகா இருக்கிறதை தெரிஞ்சுகிட்டேன்...

அவங்க உன்னைத் தள்ளிட்டுப் போனதும்.. நான் குளத்துல குதிச்சு உன்னைக் காப்பாத்தி- வீட்டுக்குக் கூட்டி வந்தேன். கொஞ்சம் நினைச்சுப்பாரு.. நான் மட்டும் அந்த நேரத்துக்கு.. அங்கே வராம இருந்திருந்தா உன் கதி என்னாகி இருக்கும். உனக்கு உதவி பண்ணின எனக்கு நீ உதவி பண்ண வேண்டாமா..? இனி ஆறு மாசத்துக்கு... நீதான் என்னோட தொழிலுக்கு மூலதனம்... முதல் முதலா... நான் உன்னைத் தொட்டு தொழிலை தொடங்கப் போறேன். வா... இப்படி வந்து என் பக்கத்துல.. உட்காரு..."

வனிதாவிடம் இயலாமை, அழுகையாய் வெடித்தது.



"தயவு செய்து என்னை விட்டுடு.."

"இதோ பாரு வனிதா.. உன்னை கட்டாயப்படுத்துறதா இருந்தா.. நேத்தே பண்ணி இருப்பேன். ரெண்டு நாளா உனக்கு காய்ச்சல்.. அதான் பரிதாபப்பட்டு விட்டுட்டேன். நீயே வந்து ஒத்துழைப்பு குடுத்தா.. எந்த பிரச்சினையும் இல்லை.."

"இல்ல.."

அலறிக்கொண்டு- கதவின் மேல போய் விழுந்து- கைப்பிடியை அசைத்து திறக்க முயன்றாள், வனிதா.

தோற்றாள்.

மது சிரித்தான்.

"தப்பிக்க முயற்சி பண்ணுறது வீண்..." சொன்னவன் தலையணைக்கு கீழே இருந்த அந்த துப்பாக்கியை எடுத்துக் கொண்டான்.

"ம்... வா..."

வனிதா துப்பாக்கி அசைவுக்கு கட்டுப்பட்டு- அவனை நோக்கி வந்தாள். பத்தடி வந்ததும் "நில்லு.." என்றான்.

நின்றாள்.

"கட்டி இருக்கிற சேலையை உன் உடம்பில இருந்து உருவு"

அவள் தயங்கிவிட்டு- பின்னர் உருவினாள்.

அடுத்த வினாடி-

கையிலிருந்த சேலை சுருட்டி- கலரோரமாய் வீசுவது போல் பாவ்லா காட்டிவிட்டு- மது முகத்தை நோக்கி எறிந்தாள்.

சேலை விஸ்தாரமாய் பரவி-

அவன் சுதாரிப்பதற்குள்-வனிதா குபீரென்று பாய்ந்து-மதுவின் கையிலிருந்த கைத்துப்பாக்கியைத் தட்டிப்பறித்தாள்.

பறித்த அந்தக் கணமே- அவனுடைய முழங்காலுக்கு கீழே சுட்டாள். ரத்தமாய் மண்டியிட்டு விழுந்தவனை

சட்டை செய்யாமல்- அந்த அறையின் மூலையில் இருந்த தொலைபேசியின் ரிசீவரை ஓடிப்போய் அள்ளி எடுத்தான்.

டயலைச் சுழற்றி-

அவசர போலீசைக் கூப்பிட்டு- நடந்தவற்றை மூச்சுவிடாமல் சொல்லத்தொடங்கினான். மறு முனையில் போலீஸ் புறப்பட்டு வர ஆயத்தமானது.

சுனில்குமார், நூலக ஒதுக்குப்புறத்தில்- ஒரு வாரத்திற்குப் பின் வனிதாவைப் பார்த்துவிட்டு, அவளுடைய உள்ளங்கையில்- பேனாவால்

**துப்பாக்கி வாழ்த்தினால்-**

**பிழைத்த-**

**என் வனிதா-**

**நீ இன்று-**

**ஒரு**

**ஆச்சர்யக்குறி!**

-என்று, அடித்தல் திருத்தல்களோடு- புதுக்கவிதையொன்றை எழுதிவிட்டு- அக்கம் பக்கம் பார்த்தபின் அவளுடைய நெற்றியில் மெதுவாய் முத்தமிட்டான். அந்த முத்தத்தில் வனிதா கண் சொருகினாள்.

## (முடிந்தது)

---

ராணி சிண்டிகேட் சார்பில் வெளியிட்டவர், ஆசிரியர்: ர. பாஸ்கரன், 86, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை-600 007. அச்சிட்டவர்: சி. கல்யாண சுந்தரம், ராணி அச்சகம், 86, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை-600 007.